வித்துவான் க. கதிரேசன் எம்.ஏ., பி.எட்.,

இந்நூலின் உரையாசிரியர் வித்துவான் **க. கதிரேசன்,** எம்.ஏ., பி.எட்., திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் (1955 - 59) பயின்றவர். 1958இல் சென்னை மாணவர் மன்றம், காரைக்குடி திருக்குறள் கழகம் நடத்திய மாநில, கல்லூரிக் கவிதைப் போட்டிகளில் முறையே 4ஆம், 3ஆம் பரிசு பெற்றவர்.

1959 - 1994 வரை குன்றக்குடி ஆதீனத்தின் குன்றக்குடி த.க.கு.மே. பள்ளியில் தமிழாசிரியர் பணி, 1959 - 1994 வரை பிள்ளையார்பட்டி வேதசிவாகம பாடசாலையில் சாத்திரம், திருக்குறள், திருமுறையாசிரியர் பணி.

பெற்ற விருதுகள் : 27-03-1994இல் குன்றக்குடி ஆதீனப் புலவர் ஆக்குதல்,
2-10-2006இல் சைவத்தமிழ்மணி விருது.
16-8-2009இல் சித்தாந்தச் செல்வர் விருது பெறுதல்.

வெளியிட்ட நூல்கள் – உரை நூல்கள் : ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் நான்மணிமாலை, இவர் மீதிலான சிற்குருமாலை; அருள்தரு வீரமாகாளி அம்மன் பாமாலை, அருள்மிகு சண்முகநாதப்பெருமான் பாராயணப் பாமாலை, அருள்மிகு தோகையடி விநாயகர் துதிக்கை மாலை, சிங்கைச் சிலேடை வெண்பா, போற்றி மடக்குப் பதிகம், பாம்பன் சுவாமிகளின் குன்றக்குடிப் பதிகம், பூவாளூர்த் தலபுராணம், தி.மீ.சு.பி. அந்தாதி, திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி, திருச்சிற்றம்பலம் வெண்பா அந்தாதி, திருவாரூர் மருந்து வெண்பா மாலை.

தொகுப்பு : விநாயகர், முருகன், அம்மை, அப்பன் மீது அருளாளர் வாக்கால் 1008 போற்றி, திருக்கோவில் வழிபாடு,

கவிதை : அருள்தரு கற்பக விநாயகர் பதிகம், அருள்தரு சண்முகநாதப் பெருமான் மாத, வார பதிகங்கள், அருள்தரு குங்குமசுந்தரி அம்மை பதிகம், அருள்தரு வீரமாகாளி அம்மைபதிகம், கல்லூரிப் பாடநூலாகவும், எம்.ஃபில், ஆய்வேடாகவும் அமைந்த "நெஞ்சுவிடுதூது".

நினைவு மலர்கள் : தோகூர்ப் பண்ணை சிவத்திரு மு. சுப்பிரமணியன் செட்டியார், இனக்காரியகாரர் அ.ந.சம்பந்தஞ் செட்டியார் மீதில்.

கட்டுரைகள் : அருள்நெறித்தந்தை குன்றக்குடி அடிகளார் அவர்களின் வரலாறு கூறும் "காலமாய் நிற்கும் காட்சி". இதழ்களில் கருத்தரங்கங்களில் இடம்பெற்ற கட்டுரைகள்.

தொடர் கட்டுரைகள் : ஸ்ரீ குமரகுருபரர் அடிச்சுவட்டில் தன் முன்னேற்றக் கருத்துக்கள், ஸ்ரீ குமரகுருபரர் அருந்தமிழில் சைவ சித்தாந்தம். கேட்டல், படித்தல், எழுதுதல் மட்டுமே பணியாகக் கொண்டுள்ளவர்.

குன்றக்குடிப் பெருமான் பதிகங்கள்

மதுரகவி ஆண்டவரின் போற்றி மடக்குப் பதிகம்

அருள்திரு பாம்பன் சுவாமிகளின் திருக்குன்றக்குடிப் பதிகம்





விளக்கஉரை :
குன்றக்குடி ஆதீனப்புலவர்
வித்துவான் க. கதிரேசன்

உ

குன்றக்குடிப் பெருமான் பதிகங்கள்

மதுரகவி ஆண்டவரின் போற்றிமடக்குப் பதிகம்
அருள்திரு பாம்பன் சுவாமிகளின்
திருக்குன்றக்குடிப் பதிகம்

03.06.2012 விசாகப் பெருவிழாவன்று

திருக்கயிலாய பரம்பரைக் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

46ஆவது குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக

பரமாசாரிய சுவாமிகள் அவர்களால்

(குவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

வெளியிடப்பெற்றது.

விளக்க உரை, அச்சுப்பணி

குன்றக்குடி ஆதீனப்புலவர். சைவத்தமிழ்மணி, சித்தாந்தச்செல்வர்

வித்துவான். க. கதிரேசன் எம்.ஏ.,பி.எட்.,

பூவாளூர் - 621 712

செல் : 9865193754

உள்ளுரை

பக்கம்

1. வாழ்த்துரை
   - தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் 3

2. அணிந்துரை, ஆசியுரை
   - முனைவர் ஸ்ரீமத் மௌனகுமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் 4

3. தோரணவாயில் 7

4. நூல்கள்
   மதுரகவி ஆண்டவரின் போற்றிமடக்குப் பதிகம் 10

   அருட்டிரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப் பதிகம் 38

ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ✆ : 264166

உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
☎ : 04577 - 264227

வாழ்த்துரை

நமது குன்றக்குடி ஆதீனப்புலவர் வித்துவான் திரு.க. கதிரேசன் எம்.ஏ.பி.எட்., அவர்கள் எழுதிய விளக்க உரையுடன் அமைந்த "குன்றக்குடிப் பெருமான் பதிகங்கள்" என்னும் நூலைப் படித்து மகிழும் வாய்ப்பு அமைந்தது. இந்த நூல் மதுரகவி ஆண்டவரின் போற்றி மடக்குப் பதிகமும் அருள்திரு பாம்பன் சுவாமிகளின் திருக்குன்றக்குடிப் பதிகமும் இணைந்ததாகும். இந்த இரண்டு பதிகங்களிலும் உள்ள திருப்பாடல்களுக்கு நம் ஆதீனப்புலவர் திரு. க. கதிரேசன் அவர்கள் எழுதியுள்ள விளக்கஉரை நுட்பமும், திட்பமும் உடைய அற்புத உரை. இந்த உரை, உரையாசிரியரின் ஆழ்ந்த இலக்கணப் புலமைக்கும், பரந்த இலக்கியப் புலமைக்கும், சிறந்த சமய நூல் பயிற்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த அருமையான விளக்கஉரையை எழுதி உதவிய உரையாசிரியருக்கு நமது உளம்நிறைந்த பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

மதுரகவி ஆண்டவன் சுவாமிகள் குன்றக்குடி அறுமுகச் செவ்வேளின் அருள்பெற்றவர். இந்நூலில் இடம்பெற்றுள்ள போற்றிமடக்குப் பதிகம் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி"ப் பாடிய அற்புதப்பதிகம்.

அருள்திரு பாம்பன் சுவாமிகள் என்று போற்றப்பெறும் அருள்திரு குமரகுருதாச சுவாமிகள் முருகப் பெருமானைக் கண்குளிரக் கண்டவர் என்று அவர்தம் வரலாறு கூறும். முருகப் பெருமானை ஆறாயிரம் திருப்பாடல்களுக்கு மேல் பாடிய அருட்புலவர்; அவர் பாடி அருளியது திருக்குன்றக்குடிப் பதிகம். இவ்விரு பதிகங்களையும் நாள்தோறும் ஓதினால் அறுமுகச் செவ்வேளின் திருவருள் பெறுவது உறுதி.

அருள்நூல்களைப் பொருளுணர்ந்து ஓதுவது பயன் தரும், "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்" என்பது திருவாசகம். இப்பதிகப் பாடல்களின் பொருளை உள்ளவாறு உணர்ந்து ஓதுவதற்கு இந்த விளக்கஉரை கைவிளக்காகப் பயன்படும். பொருள் உணர்ந்து ஓதி உய்தி பெறுவோமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

உ

குருபாதம்

பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிர மன்னி
ஆணிக் கனகமு மொக்கு மையாற னடித்தலமே! – அப்பர்

முனைவர். ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை
தருமையாதீனம் ஸ்ரீ பஞ்சநதீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்
திருவையாறு - 613 204. ☎ 04362 - 260332.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன் நாள் : 8.1.2012
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொழுவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

"குன்றக்குடிப்பெருமான் பதிகங்கள்" எனும் நூலில் தோரணவாயிலுடன், மதுரகவி ஆண்டவரின் போற்றிமடக்குப் பதிகம், பாம்பன் சுவாமிகளின் திருக்குன்றக்குடிப் பதிகம் ஆகியவைகட்கு, உரை, குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இலக்கணக் குறிப்புக்கள் எழுதிய க. கதிரேசன் அவர்களின் புலமை நவில்தோறும் இன்பம் பயப்பது. "பரவிடுநல் சீலர்க்கு இன்பம் தருவானை" என்பதில் இன்பம் – உலகியல் இன்பமும், வீடுபேற்றின்பமும் என விளக்கமளித்து, "சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு அணியன" என அப்பர் அடிகளின் வரியினைக் காட்டியது சிறப்புடையது. "மலர்க்கொன்றைத் தொங்கலான் அடியார்க்கு சுவர்க்கங்கள் பொருள் அலவே" என்ற சம்பந்தர் வாக்கும் "பொழியாத புயல் தங்குபுவனமும், திசைமுகப் புத்தேள் பெரும் புவனமும், பொன்னுலகு மண்ணுலகு மற்று எவ்வுலகு வேண்டினும் பொருளன்று மற்ற அழியாத வீடும் தரக்கடவன்" என்ற குமரகுருபரர் வாக்கும் சிந்திக்கத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. "அருகிருத்திப் பொருளைச் சொன்ன" என்பதற்குக் கந்தர் அந்தாதி, திருப்புகழ் காட்டுகள் சிறப்புடையன. குமரகுருபரர் "பொன்னங்கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம்பிரமம் மொழிந்தோனே" என்பதும் சிந்திக்கக்கூடியது.

கனத்தானை – பெருமையனை என்று விளக்கி, மற்றோர்க்கில்லா எண்குணம் காட்டியதே சிறப்புடையதாகும். அப்பரடிகளும் "கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே" என்றும் "கனத்தகத்தான் கயிலாயத்து உச்சியுள்ளான்" என்றும் காட்டியுள்ளார். "மாறாமல் கவனிப்போர்கள்" சிந்தாந்தப் பொருளும் கூறி உந்தியார் மேற்கோளும் காட்டி யோகியார்க்குரியதை ஒன்றியிருந்து உரைத்திருப்பது சாலப் பொருத்தம். உயிராவணம் இருந்து உற்றுநோக்கியோர்களின் தன்மை. மேலும் அப்பரடிகள் "என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" என்பார். அருணகிரிநாதரும் "நீயும் நானுமாய் ஏகபோகமாய்" என்பார். "ஒன்றியிருந்து நினைமின்கள்" என்பதும் அப்பர்வாக்கே. "முதிர்ந்தசீலர் மகத்தானை" என்பதற்கு உரையில் மகம் – இன்பம் என்று பொருள் கொண்டு இன்புற்றிருக்கிறார்கள் ஆசிரியர் கதிரேசன் அவர்கள். மகம் – வேள்வி என்றும் கொள்ளலாம்.

"வேதியர் வேள்வியும் ஆவன" என்றும் "அங்கங்கள் ஆறும் நான்கும் அந்தணர்க்கருளி" என்றும் அப்பரடிகள் காட்டுவார். "அஞ்சுமுகத்தான்" என்பதற்குரிய உரை எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப்பொருளே என்ற குமரகுருபரர் வாக்கை நினைவுறுத்துகிறது.

"ஐந்தொழில் நேமகத்தானை" உரை, முழுமுதற்கடவுள் என்பதற்குரிய நிலையைக் காட்டுவது சிறப்பு. இதனை விளக்க ஸ்ரீ குருஞானசம்பந்தர் "எரிசுடுவதல்லால் இரும்பு சுடுமோ – அரி அயற்குவாசவற்கும் பூணுமே தன் தொழில் நின்பொன்னருளால்" என்பார்.

சேவற்கொடியானை என்பதற்கு நிறம் அறிந்து கண்டது சிறப்பு. குமரகுருபரரும் "தீநிறக்குடுமி வெண்சேவலை உயர்த்துவன்" என்பதை உணரக்காட்டியதாக அமைந்தது. சேவல் – இனம் விலக்கிய அடைமொழி என்ற இலக்கணக்குறிப்பு புலமையைக் காட்டுகிறது.

"மாயான்" என்பதற்குரிய பொருள் மேற்கோளில் சிலம்பின் "பிறவா யாக்கை பெரியோன்" என்றும் "மூவாய் பிறவாய் இறவாய் போற்றி" என்று அப்பர் அடிகளும் "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என அருணகிரியாரும் காட்டுவர்.

ஒண்ணா–ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உரியார் – வினையால் அணையும் பெயர், என அங்கங்கே சொல்லுக்கெல்லாம் இலக்கணக்குறிப்பு காட்டியிருப்பது பழுத்த தமிழ்ப் புலமை பாலித்ததைக் காட்டுகிறது.

அருள்திரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப் பதிகத்தில் "கோமுனிவோர் தொழும் கோவே, குன்றக்குடி உறை தேவே" எனும் பாடலுக்கு உயிர்க்குலத்துக்கு இம்மை நலங்கள் வழங்குவது பற்றிக் "கோவே" என்றும் மறுமையில் வீட்டின்பம் நல்குவது பற்றித் "தேவே" என்றும் உரைகண்டிருப்பது நவில்தொறும் புலமை வெளிப்பட்டு இன்பம் பயப்பதாக அமைந்துள்ளது.

"ஆறு சமங்கள் தோறும் ஆனந்தமாய் விளையாடி" என்பதில் "நாமும் அவனும் பேதகமன்றால்" கந்தபுராணம் போன்று கந்தர் கலிவெண்பா "ஐந்துமுகத்தோடு அதோமுகமும் தோன்றி" எனக்காட்டும். மேலும் விளையாட்டிற்குரிய உரை நயம் எண்ணி மகிழத்தக்கது. மக்களின் விளையாட்டு, தான் வெற்றிபெறவேண்டும் என்ற தன்னனயப்பும் பெருமுயற்சியும், பரிசுவிழைதலும் பிறர் வெற்றியுற்றால் அவர்மீது அழுக்காறு, சினம் முதலியன கொள்ளுதலும், இடைவெளியும் உடையன. ஆனால் பெருமான் விளையாட்டு தன்னயப் பற்றது எனவேறுபாடு காட்டியது சிறப்புடையது. "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்ற மணிவாசகமும் இன்புறத்தக்கது.

"சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்" என்ற இலக்கண மரபையொட்டிக் காத்தலாகிய நடுவணதை "நடு" என்ற சொல்லால் ஈற்றில் வைத்தார் என்றும், கூறுமறை – வினைத்தொகைகள், உன் அடி – சினையாகுபெயராய்ப் பெருமானைக் குறித்தது. வாழ்வே – தேற்றேகாரம் என இலக்கணக்குறிப்புக்கள் பழுத்த தமிழ்ப் புலமையைப் பாலித்துக்காட்டுகிறது.

"நாசமில்லா உயிர்" என்பதனை "என்றுநீ அன்று நான் உன்னடிமை அல்லவோ?" எனத் தாயுமானவரும் "எஞ்ஞான்றுளை அஞ்ஞான்றுளமே" எனக் குமரகுருபரரும் திருமூலரை வழியொட்டி வகுத்தனர்.

"மாசில் உருக்கொண்டு" என்பதற்குக் குமரகுருபரரும் "காசுலாம் மலினம் கரந்த காரணத்தால் மாசிலாமணியென வண்பெயர் நீறீஇ" என்பர்.

"அண்டகோடி" என்பதற்கு அறிவியலாரின் அனுபவ ஞானத்தை விவரித்திருப்பதால் தமிழ்ப்புலமையோடு, விஞ்ஞானப்புலமையையும் கலந்து கற்றதைக் காட்டுகிறது. "அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படிக் கிச்சைவைத்துயிர்க்குயிராய்த் தழைத்தது எது" எனத் தாயுமானவரும் காட்டுவார்.

"உள்குவாரே விஞ்சு அறிவு ஆக்கம் உள்ளோர்கள்" என்றதற்குச் சிறப்பாக அமைந்துள்ளது உரை. அப்பரடிகளும் "யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்பார்.

"அரும்பொருள் தன்னைக் கூட்டிக் கொடுத்திடும் கோ" என்பதற்கு இறைவனின் தண்ணருளை விளக்கியிருக்கிறார். சுந்தரரும் "அடியேற்கும் அருளுதிரே" காட்டுவார்.

"ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே இழிந்தோன் ஒப்போன் உயர்ந்தோன் இரப்புரை" எனும் இலக்கணக்குறிப்புக் காட்டி "ஈதி" என்றதனால் பெருமானின் தன்னிகரில்லாத் தகுதியும், தன் தாழ்நிலையும் குறித்தார் எனக் காட்டுவது இறைவனின் மேலான தன்மையையும், ஆன்மாவின் இழிவான இயல்பையும் பிரித்துக்காட்டியுள்ளார். இவற்றில் கூட்டு முறை எனும் உத்தியும் காட்டியுள்ளது படிப்போருக்கு எளிதில் விளங்குவதாக அமையும்.

இவ்வகையில் சிறந்த உரை வளம் சேர்க்கும் பல்துறை அறிவும் கைவரப்பெற்ற குன்றக்குடி ஆதீனப்புலவர் க. கதிரேசன் அவர்கள் கல்வியே கற்புடைய பெண்டிராகவும் அப்பெண்டிருடன் இன்புற்றீன்ற புதல்வனே கவிதையாகவும் செல்வமே சொல்வளமாகவும் கொண்ட குடும்பத்தலைவனாகத் திகழ்கின்றார். இதனைக் குமரகுருபரர்

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப்புதல்வனே யீர்ங்கவியாச் – சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமுமுண்டு சிலர்க்கு"

என்ற நீதிநெறி விளக்கத்திற்கு விளக்கமாகத் திகழ்ந்திடும் கதிரேசன் அவர்கள் இதுபோன்ற பல அரிய நூல்களுக்கு உரைவளம் கண்டிடச் செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும் தருமையாதீனக் குருமணியின் குருவருளையும் சிந்திக்கின்றோம்.

– குமாரசுவாமித் தம்பிரான்

உ

தோரணவாயில்

அடியார்கள் வாழ்வாக விளங்கும் ஆறுமுக அப்பன் அருள்தரு சண்முகநாதப்பெருமான், குன்றிலுயர் குன்றக்குடித் திருத்தலத்தில் வற்றாத திருவருளை வாரிவழங்கும் வள்ளலாக, நம் இருதாயாராகிய அருள்தரு வள்ளிநாச்சியார் (இச்சை) அருள்தரு தெய்வயானை அம்மையார் (செயல்) ஆகிய இருவரும் தனித்தனி மயில்ஏறிப் புடைசூழ, தான் "வாசி" என்னும் மயில்ஏறி ஞானவேல் ஏந்தி ஞானபண்டிதனாக வீற்றிருக்கிறான். அன்று முதல் இன்றுவரை இப்பெருமான் அருளிவரும் திருவிளையாடல்கள் – அருளிப்பாடுகள் எண்ணிலடங்கா.

வேண்டுவோர் வேண்டுவதே விழைந்து வழங்கும் இப்பெருமான், தன் அடியார்களிடம் வேண்டிப்பெறும் விருப்பமும் உடையவன் என்பது வரலாறு கூறும் உண்மை. இதற்குச் சான்றாகத் திகழ்வதே "ஸ்ரீமயூரகிரி சண்முகப் பிரபந்தம்" என்ற அரிய பதினெட்டு நூல்களின் தொகுப்பு.

இன்றைய தேவகோட்டைக்கு மேற்பால் உள்ளது வேப்பங்குளம் என்ற திருவூர். இவ்வூரவரான அறவோர் சோணைமுத்து அம்பலகாரர். இவரது திருமகன் முத்தையப் பாவலர். பேரறிஞராகவும் பெருங்கவிஞராகவும் விளங்கிய இவர் தன்கால அறிஞர் பலருடன் நெருங்கிப்பழகியவர்; குன்றக்குடிப் பெருமான் மீது வற்றாத பேரன்பினர்; குன்றக்குடியிலேயே சிலகாலம் வாழ்ந்தவர்; பெருமானை நாடோறும் மலையேறி வணங்கி மகிழ்ந்த உள்ளத்தவர். இவர் கனவில் குன்றக்குடிப் பெருமான் எழுந்தருளி,

"……
புத்திர நமதுஅருள் புரிந்தனம் உமக்கு
நம்பராக் கிரம நயமதை விமரிசை
சம்பிர மத்துடன் சண்முகப் பிரபந்
தம்ஒன்று பாடுக தனயா"

என்று அருள, அதன்படி எழுந்ததே "ஸ்ரீ மயூரகிரி சண்முகப் பிரபந்தம்" என்ற 18 நூல்களைத் தன்னகத்தே கொண்ட அருள்தொகை நூல். அவை ஸ்ரீமயூரகிரி குமரகுருபரக் கடவுள், திருவிளையாடல், பால்யத் திருவிளையாடல், பராக்கிரமம், ஆண்டருள் என வேண்டுதல் ஆகிய பதிகங்களுடன், மாதப்பதிகம், வாரப் பதிகம், போற்றி மடக்குப் பதிகம், சரணப்பத்து, சந்தவருகைப் பதிகம், மயூரகிரி முருகன் அனுபூதி, மயூரகிரி அந்தாதி, ஸ்ரீ மயூரகிரி சுப்பிரமணியர் மீது வெண்பாமாலை, அஞ்சுவித பஞ்சரத்ன வெண்பா, எக்காலக்கண்ணி, ஸ்ரீ மயூரகிரி திருப்புகழ்,

நாமாவளி, கீர்த்தனைகள், வாழிசந்த விருத்தம் எனப்பல. இவையனைத்தும் வெண்பா, சந்தப்பா, கீர்த்தனம், ஆசிரியப்பா, கலித்துறை, கண்ணி, திருப்புகழ்ச் சந்தம், இந்துஸ்தானி மெட்டு, புதுச்சந்த வகை ஆகியவற்றால் அமைந்து திருவருளை வாரிவழங்குகின்றன. இவற்றுடன் சிதம்பரம் ஸ்ரீ நடராசர் மீது இயற்றிய நடனப் பதிகமும் இத்தொகை நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்நூல்களுக்கு மகிழ்ந்த குன்றக்குடியான் மீண்டும் இவர் கனவில் எழுந்தருளி "மதுரகவி" என்ற காரணப்பெயர் அமைந்த பட்டமும் வழங்கி வாழ்த்தினான். இச்செய்திகள் அனைத்தையும் இந்நூலுக்குச் சாத்துக்கவிகள் தந்துள்ள மதுரகவி. பெ. பெருமாள் ஆசாரியார், அருட்கவி ம.கா. செய்க்கப்துல்காதிறு, மகுமுது முத்துப்பாவாப்புலவர், மு. முத்துவயிரக் கவிஞர் ஆகியோர் கவிதைகள் வழங்கியுள்ளன.

கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேர கி.பி. 1913இல் மு.கரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் முதன்முதலாக அச்சிட்டு வழங்கியுள்ளார்.

இவ்வரிய அருட்பிரபந்தத்துப் பதினெட்டு நூல்களுள் ஆண்டருள்பதிகம், சந்தவருகைப் பதிகம், ஸ்ரீ மயூரகிரி முருகன் அநுபூதி ஆகிய மூன்றும் அடியேனால் குறிப்புரை, பொழிப்புரை, விளக்கவுரை எழுதப்பெற்று வெளிவந்தன. தற்போது வெளிவரும் இப் "போற்றி மடக்குப் பதிகம்" நம் குன்றக்குடி ஆதீனத்திங்கள் இதழாகிய "மக்கள் சிந்தனையில்" தொடராக கூட்டுமுறை, குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இலக்கணக்குறிப்பு ஆகியன அடியேனால் எழுதப்பெற்று வெளிவந்தது. அத்தொடரே தற்பொழுது நூல்வடிவம் பெற்றுத் தங்கள் திருக்கரங்களில் ஒளிர்கிறது. இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றும் தத்தம் அடிகள் தோறும் முதற்சீராக வந்த தொடரே மூன்றாம் சீராகவும் மடங்கி வந்தமைந்துள்ளது ஆதலின் இது இப்பெயர் பெற்றது.

அருள்தரு குன்றக்குடியானைப் போற்றிப் பாடி மகிழ்ந்த அருளாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் "பாம்பன் சுவாமிகள்" என்று போற்றப்பெறும் "ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்". இவரது திருப்பாடல்கள் தோத்திரச் சுவையும், சாத்திர மணமும் ஒருசேரக் கொண்டவை. கி.பி. 1852 முதல் 30.5.1929 வரை தமிழ்நாடு எங்கும் ஞான ஒளி பரப்பிய இவர்களது அருட்சமாதி சென்னை - 14 திருவான்மியூரில் திகழ்கிறது.

முருகனை ஆறுமுகச் சிவனாகப் போற்றிய இவர்கள், "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள்

எல்லாம் தலை" என்ற பொய்யாமொழியைப் பின்பற்றிய இல்லற ஞானியாய் விளங்கி, பின் துறவு மேற்கொண்டவர்கள். இவர்களின் நூல்களும் 6666 திருப்பாடல்களும் கற்பவர் மனத்தைக் கவர்வன. பக்குவப்படுத்துவன. திருப்பதிகங்களுள் ஒன்று "திருவுரு மலைக் கோமகன்" என்ற தலைப்புடைய பாடல் - மிகு சிறப்பு உடையது. இது 64 சீர் கொண்ட கலைச்சீர் கழிநெடில் ஆசிரியவிருத்தமாகும். (கலை - 64). படிப்பவர் அமைத்துக்கொள்ளும் முறையில் இப்பாடலை அமைத்துக் கொள்ளும்போது இது மொத்தம் 125 பலவகைப் பாக்களாக அமைந்து ஒளிர்வது.

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதனைப் போற்றி "திருக்குன்றக்குடி" என்ற தலைப்பில் இவர் அருளிய பதிகம் திருஅலங்கல்திரட்டு முதல் காண்டத்தில் மணக்கிறது. இதற்குரிய பண் பகற்பண்ணாகிய "காந்தாரம்" என்பதை அடிகளே பிற பாடல்களுக்கு வகுத்தது போல வகுத்துத் தந்துள்ளார். இப்பதிகம் மன்மத ஆண்டு (1895) ஆடித் திங்கள் 3ஆம் நாள் புதன்கிழமை அருளப்பெற்றது என்பது இப்பதிகத்து அடிக்குறிப்பால் புலனாகிறது. இக்குன்றக்குடிப் பதிகமும் இங்கு இடம்பெறுகிறது.

தமது இடையறாப் பணிச்சுமைகளுக்கிடையே என்பிற நூல்களுக்கும் வழங்கியுள்ளது போலவே இந்நூலுக்கும் அணிந்துரை ஆசியுரை வழங்கிச் சிறப்பித்துள்ளதுடன் வெளியிட்டும் சிறப்பித்துள்ள திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் குருமகாசந்நிதானம் (46), வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளை மனம்மொழி மெய்யால் வணங்கி மகிழ்கிறேன்.

மேலும் இந்நூலுக்குத் தமது பல்வேறு பணிகளுக்கிடையே அணிந்துரை, ஆசியுரை வழங்கிச் சிறப்பித்துள்ள வணக்கத்திற்கும், வழிபாட்டிற்கும், போற்றுதலுக்கும் உரிய, திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் கட்டளை விசாரணை சுவாமிகள் முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகடிள மனம்மொழிமெய்யால் வணங்கி மகிழ்கிறேன்.

மேலும் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கியுள்ள குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதன் அச்சகத்தினர்க்கு என் நன்றியுரியது.

அன்புடன்

வித்துவான். கதிரேசன் எம்.ஏ.பி.எட்.,

உ

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் மீது மதுரகவி ஆண்டவரின் போற்றி மடக்குப் பதிகம்

1. வருவானை நிதியினைக்க வருவானை அகிலமெலாம் வணங்கி ஏத்தப்
பெருவானைக் கதிர்மதிஆர் பெருவானைக் கனிவினொடும் பேணிக் காத்துத்
திரிவானை மலைகள்தொறும் திரிவானைப் பரவிடுநல் சீலர்க்கு இன்பம்
தருவானை வனவேங்கைத் தருவானை அனுதினமும் சார்ந்து வாழ்வாம்.

கொண்டுகூட்டு :

இதில் "வருவானை" முதலாக, குன்றக்குடிப் பெருமானைக் குறிக்கும் வினையாலணையும் பெயர்களுடன், பாடலின் இறுதி மூன்று சீர்களையும் தனித்தனி கூட்டுக. பிற பாடல்கள் தோறும் இங்ஙனமே கூட்டுக.

குறிப்புரை :

வருவானை = அருளத்தானே வலிய வருகின்றவனை. நிதி = மறைத்தல் - இது நம் கட்புலனாகாமல், நம்மை வதைக்கும் மும்மலம் குறித்தது. கவர்தல் = கடத்தல். இரண்டாமடி முதலில் பெறுவானை என்றது (பெருவானை என்று வந்தது). பெருவானை = அண்டப் பரப்பை. கனிவு = பேரருள். பேணுதல் = போற்றுதல். திரிவானை = நடப்பவனை, உலாவுகின்றவனை. சீலர் = நல்லொழுக்கமுடையவர். வேங்கைத்தரு = வேங்கைமரம். சார்ந்து - தூய அன்பால் பொருந்தி.

பொழிப்புரை :

அருளத்தானே வலிய வருகின்றவனை; நம்கட்புலனாகாமல், நம்மை வதைக்கும் மும்மலங்களையும் இயல்பாகவே கடந்தவனை; உயிர்கள் எ ல்லாம் தன்னை வணங்கவும் போற்றவும் பெறுகின்றவனை ; ஞாயிறும் திங்களும் பொருந்திய அகன்ற அண்டப்பரப்பைப் பேரருளோடும் போற்றிக் காத்து நடக்கின்றவனை; மலைகள் தோறும் உலாவுகின்றவனை; தன்னைப் பரவும் நல்லொழுக்கமுடையார்க்கு இன்பம் தருகின்றவனை; வள்ளி நாச்சியார் பொருட்டுக் காட்டில் வேங்கைமரம் ஆனவனை; நாள்தோறும் மனம்மொழி மெய்யால் பொருந்தி வாழ்வோம்.

விளக்கம் :

வருவானை :

தானேவந்து தலையளித்து ஆட்கொண்டருளும் வள்ளலாக, இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருள வந்தருளும் சேவகனாக விளங்குகின்றவன் இக்குன்றக்குடிப் பெருமான் என்றார்.

நிதியினைக் கவருவானை :

உயிர்க்குலத்தின் பொறி புலன்களுக்குத் தட்டுப்படாமல் இயங்கி வதைப்பன மும்மலங்கள். பிற இருமலங்களுக்கும் மூலமான ஆணவமலம் பற்றி, "பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும் கணவற்கும் தோன்றாதகற்பு" - என்பது திருவருட்பயன் - 25. பெருமான் இயல்பாகவே மலங்கடந்தவன் ஆதலின், இவனை "நிமலன்" என்பது மரபு.

வணங்கி ஏத்த :

வணங்கல், "தலையே நீவணங்காய்" - என்றவாறு தலைதாழ்த்தி வணங்கல் - இது பணிவின் குறியீடு. ஏத்தல் என்றது வாயாரப் பாடிப் போற்றுதல். வாய்விட்டுப் பாடுதலால் செவி முதலிய பொறிகளின் செயல் அடங்குதலும், மனம் ஒன்றுதலும் இயல்பு. இதனாலேயே நம் சான்றோர் இவற்றைப் பின்பற்றினர்.

கதிர்மதி ஆர்பெருவான் :

ஞாயிறும் திங்களும் பொருந்திய பேரண்டப் பரப்பு. "செல்லச் செல்ல விண்வெளி விரிந்து கொண்டே செல்கிறது" என்ற விண்வெளி அறிவியல் குறிப்புடையது "பெருவான்" என்றது.

மலைகள்தொறும் திரிவானை :

"சேயோன் மேய மைவரைஉலகம்" என்பது தொல்காப்பியம். "குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் கோவில்" என்பது மரபு. இப்பெருமான் எழுந்தருளியுள்ள குன்றுகளுள் "குன்று" என்ற சொல்லையே முதலாவதாகக் கொண்ட பெயருடையது குன்றக்குடி என்பது எண்ணத்தக்கது.

பரவிடுநல் சீலர்க்கு இன்பம் தருவானை :

இவனைப் போற்றுவார்க்குப் பரவுதல் மட்டுமன்றிச் சீலமும் இன்றியமையாமை குறித்தார். சீலம் - அன்றாட வாழ்க்கையில் உயர் பண்புகளை மேற்கொண்டு ஒழுகுதல். இன்பம் - உலகியலின்பமும், வீடுபேற்றின்பமும். "சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு அணியன" (திருமுறை 6 ஐயாறு - 3. 3-4) என்பார் அப்பரடிகள்.

வனவேங்கைத் தருவானை :

தான் எத்துணைப் பெரியனாயினும், தன்னை நினைந்து உருகும் அடியார்க்கு எளியனாய் அருளுதல் குறிப்பது, வள்ளிநாச்சியார்க்கும் பிறர்க்கும் வேங்கைமரமாய்க் காட்சி தந்தது. மாணிக்கவாசகர், சிவபெருமானைச் சேவகனாகவும், பாரதியார் கண்ணனைக் காதலி முதலிய நிலைகளிலும் கண்டு கூறியதை எண்ணுக.

அனுதினமும் சார்ந்து வாழ்வாம் :

நாடோறும் உடலின் அழுக்ககற்றி, வெப்பமும் தணிப்பது நீராடல். அதுபோல நாடோறும் "நனைந்தனைய திருவடி"யனைச் சார்வதால் உயிரின் மலஅழுக்கு நீங்குதலும் உயிர் - உள்ளம் குளிர்தலும் நிகழுமாதலின் "அனுதினமும்" என்றார்.

"நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு..... ஆரூரா
என்றென்றே அலறாநில்லே"

என்ற அப்பரடிகள் திருவாக்கு எண்ணுக.

இலக்கணக் குறிப்பு :

பெறுவானை என்று வரவேண்டியது பெருவானை (இரண்டாமடி முதற்சீர்) என்று வந்தது எதுகை நோக்கிய செய்யுள் விகாரம். வருவானை, கவருவானை, பெருறுவானை, திரிவானை, திரிவானை, தருவானை, தருவானை என்பன வினையாலணையும் பெயர்கள். அகிலம் - இடவாகு பெயர். கதிர்மதி - உம்மைத் தொகைகள். நல்சீலர் - பண்புத்தொகை. வாழ்வாம் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்று. பிறபாடல்களில் இறுதிச் சீராகவரும் "வாழ்வாம்" என்பனவும் இவ்வகையினவே.

2. புரத்தானை எரித்தசடைப் புரத்தானை அருகிருத்திப் பொருளைச்சொன்ன
வரத்தானை வள்ளிசுயம் வரத்தானைக் கஞ்சமலர் தன்னில் வாழ்நால்
சிரத்தானைச் சாடும்அறு சிரத்தானைச் சீரலைவாய்ச் செந்தில்மேவு
பரத்தானை வெறுவெளிஅம் பரத்தானை அனுதினமும் பணிந்து வாழ்வாம்.

குறிப்புரை :

புரம் = முப்புரம்; திருமேனி. தானை = சேனை. சடை = பிரபை - ஒளிவட்டம். பொருள் = ஓங்காரப் பொருள். வரம் = மேன்மை. சுயம் வரத்தானை = தானே தேடிச் சென்று மணந்தவனை. நாற்சிரத்தான் = நான்முகன். சாடும் = குட்டும். சீர் = இரைச்சல். அலை = கடல். வாய் = விளிம்பு. பரத்தானை = கடவுளை, மேலிடமாக - வீடுபேறாக உள்ளவனை.

பொழிப்புரை :

முப்புரத்தார் சேனையை எரித்து அழித்த ஒளிவட்டம் உடைய திருமேனியனாகிய சிவபெருமானைத் தமது அருகில் அழைத்து இருத்தி, ஓங்காரப் பொருள் உபதேசித்த மேன்மையனை, வள்ளி நாச்சியாரைத் தானே தேடிச் சென்று மணந்தவனை, செந்தாமரை மலரில் வாழும் நான்முகனைக் குட்டிய ஆறுமுகப் பெருமானை, இரைச்சல் உடைய கடலின் விளிம்பில் உள்ள திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள கடவுளை, அனைத்துக்கும் மேலிடமாக - வீடுபேறாக உள்ளவனை நாடோறும் வணங்கி வாழ்வோம்.

விளக்கம் :

புரத்தானை எரித்த :

முப்புரம் என்பது மும்மல காரியம் - திருமந்திரம். 343. மலங்கள் அழியாதன; அநாதியன. முப்புர அசுரர்களான கமலாட்சன், தாரகாட்சன், வித்தியுன்மாலி ஆகிய மூவரும் மலங்களின் குறியீடாதலின் அவர்களை உரியவாறு பயன்கொள்ள அமைத்துக் கொண்டான். முப்புர எரியில் அழிந்தது அவர்களது சேனையேயாதலின் புரத்தானை என்பதற்கு முப்புரச்சேனையை என்று பொருள் கொள்ளப்பெற்றது.

கமலாட்சனை, சிவபெருமான், தான் கரிக்காட்டு அரங்கில் ஆடும் பண்டரங்கக் கூத்துக்கு மணிமுழா முழக்கவும், எஞ்சிய இருவரையும் கயிலை வாயில் காவலராகவும் ஆக்கிப் பணிகொண்டவன். இதனைச் சுந்தரர் தமது தேவாரத்துத் திருப்புன்கூர்த் திருப்பதிகம் பா.எண். 8ல் குறிக்கிறார்.

"மூவெயில் செற்ற ஞான்று...." என்று தொடங்கும் திருப்பாடல் அது.

சடைப் புரத்தானை :

ஒளிவட்டம் கொண்ட திருமேனியன். நம் இறைவன் திருவுருவம் காட்டும் பண்டைய ஓவியங்களில் அத்திருமேனியைச் சுற்றி ஒளி வட்டம் இட்டிருப்பர். மனிதருக்குள்ளும் உள்ள "இவ்வொளி வட்டம் அவரவரது நல்ல எண்ண ஆற்றலுக்கேற்பச் செறிவாய் அமைந்து பிறரை ஈர்க்கும்" என்பது உருசிய நாட்டு விஞ்ஞானியர் கண்ட அறிவியல் உண்மை. இதனையொட்டி, அண்டங்கள் அனைத்தும் வணங்கி ஏத்தப்பெறும் பரம்பொருட்கும் இவ்வொளி வட்டம் குறிக்கிறார் மதுரகவி ஆண்டவர்.

அருகிருத்திப் பொருளைச் சொல்லுதல் :

சனகாதி முனிவர்கட்கு உபதேசித்த பரம்பொருளுக்கு - சிவத்துக்கு ஓங்காரப் பொருள் உபதேசித்த போது சிவபெருமான் பணிவுடன் கேட்ட நிலையை, கந்தர் அந்தாதியில்

"சீயனம் போதினை வாய்ப்புதைத்துச் செவிதர" - பா.19

என்றும், அவர் உபதேசம் கேட்ட திருச்செவி

"தெட்சிண செவிதனிலே போதம்அருளிய குருநாதா".

(திருப்புகழ் 1025)

என்பதன் மூலம் கேட்ட திருச்செவி வலது திருச்செவி என்றும் கூறுகிறார் அருணகிரிநாதர்.

வரத்தானை

முருகன் சிவமேயாதலின் ஐந்தொழில் புரியும் நான்முகன், திருமால், அரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவர்க்கும் மேலானவன் ஆதலின் வரத்தானை என்றார்.

வள்ளி சுயம்வரத்தானை

சூரன் முதலியோரை வென்றது கருதித் தேடிவந்து இந்திரன் உவந்து அளித்த பரிசு தெய்வயானை அம்மையார். ஆனால் வள்ளி நாச்சியரைப் பெருமானே தேடிச்சென்று மணந்ததால் சுயம்வரத்தான் ஆயினான்.

நாற்சிரத்தானைச் சாடியது

"ஐஆன னத்தெவ்வை ஆறுஆனனம் கொண்டு
அடர்த்திடும் மணிக்கரத்தால்"

- குன்றக்குடிமயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ்.சப்.6

(சிவபெருமான், பிரமனின் செருக்கடக்க அவனது ஒருதலை கிள்ளுமுன் பிரமனின் தலைகள் ஐந்து. அதனை இங்குக் குறிக்கிறார்).

முருகன் குட்டியதை அருணகிரியார் தாளமிட்டதாகக் கூறுகிறார்.

"நாலுமுகன் ஆதிஅரி ஓம்எனஅ தாரம்உரை
யாதபிர மாவைவிழ மோதிபொருள் ஓதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபடத் தாளமிடும் - இளையோனே"

- திருப்புகழ் 993.

என்று சுவையுறக் கூறுகிறார்.

இலக்கணக்குறிப்பு :

சடைப்புரத்தானை, வரத்தானை, சுயம்வரத்தானை, நாற்சிரத்தானை, அறுசிரத்தானை, பரத்தானை, அம்பரத்தானை - வினையாலணையும் பெயர்கள். கஞ்சமலர் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வாழ்நாற் சிரத்தானை - வினைத்தொகை. அலை - தானியாகுபெயர்.

3. கனத்தானைச் சிகண்டியின்வா கனத்தானை மாறாமல் கவனிப்போர்கள்
மனத்தானை அருள்புரியும் மனத்தானை யாசிப்போர் வழங்க ஈயும்
தனத்தானை மோட்சசா தனத்தானைப் புலவோர்கள் தழுவத்தக்க
வனத்தானை உயர்வேத வனத்தானை அனுதினமும் வணங்கி வாழ்வாம்.

குறிப்புரை :

கனத்தான் = பெருமையன். சிகண்டி = ஆண்மயில். மாறாமல் = பிற நினைவுகட்கு மாறாமல். கவனிப்போர் = கூர்ந்து நோக்குகின்றவர். வழங்க = இயங்க. ஈயும் = வழங்கும் - கொடுக்கும். தனம் = உலகியற் செல்வம். சாதனம் = செல்வம். புலவோர் = ஞானியர். வனத்தான் = அழகன். வேதவனத்தான் = ஞான அழகன். (வேதம் = ஞானம்)

பொழிப்புரை :

பெருமையனை; ஆண்மயில் பரியுடையவனை; பிற நினைவுகட்கு மாறாமல், பெருமானையே மனத்தில் தீட்டிக் கூர்ந்து நோக்குகின்றவர் மனத்தில் எழுந்தருளி இருப்பவனை; அந்நிலையினர்க்கே அருள்புரியும் திருவுளத்தனை; தன்னிடம் யாசிப்பவர்கள் இயங்க - வாழ உலகியற் செல்வங்களை வழங்குகின்றவனை; வீடுபேறாம் செல்வமாக விளங்குகின்றவனை; ஞானியர் தழுவத்தக்க அழகனை; ஞானவடிவான அழகனை நாடோறும் வணங்கி வாழ்வோம்.

விளக்கம் :

கனத்தான் : சிவபரம்பொருளே முருகன். எனவே பிறர்க்கு இல்லாத தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவுஇல் ஆற்றலுடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்ற எண்குண வடிவன் ஆதலின் கனத்தானை - பெருமையனை என்றார்.

சிகண்டியின் வாகனம் :

சிகை = உச்சிக்குடுமி. சிகண்டி = உச்சிக்குடுமி உடைய ஆண்மயில். மயிலூர்தியைப் "மயிற்பரி" என்றும் ஆன்றோர் கூறுவர். "தோகை வாம்பரி உகைத்தவன்" (முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். சிறுதேர்:4:4) என்று ஸ்ரீ குமரகுருபர அடிகளும், "தோகை மயிற்பரியானே" - (திருக்குன்றக்குடிப்பதிகம்.10) என்று பாம்பன் சுவாமிகளும் குறிப்பர்.

இம்மயில் ஓங்காரத்தின் குறியீடு என்பார் அருணகிரியார்.

"ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்டது
ஆடுமயில் என்பது அறியேனே"

- சோலைமலை - வாதினையடர்ந்த....2

குன்றக்குடி - உ.சிறுவயல் சாலையில் அரை கி.மீ. சென்று குன்றக்குடித் திருமலையை நோக்கின், மலைஏறும் திருப்படிகள் மயிலின் தோகையாக, திருக்கோயில் தளம் முதுகாக, பெருமானும் பெருமாட்டியரும் எழுந்தருளியுள்ள கருவறை இருப்பிடமாக, கருவறைத் திருக்கோபுரம் கொண்டை - குடுமியாகக் கண்டு மகிழலாம். எனவே இம்மலையை, மயில் மலை, மயூரகிரி, சிகிமலை, சிகண்டிமலை என்று இதன் இலக்கியங்கள் வழங்கும்.

மாறாமல் கவனிப்போர்கள் :

இங்ஙனம் கவனித்தலை அப்பரடிகள்,

"உயிரா வணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிழியின் உருஎழுதி
உயிர்ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால் உணரப்படுவாரோடு
ஒட்டி வாழ்தி"

(திருமுறை 6. திருவாரூர் 1-2)

என்பார். இச்செய்தியோகியர்க்குரியது என்றாலும் இறைவனொடு ஒன்ற நினைக்கும் அனைவர்க்கும் பொது.

மாறாமல் கவனித்தலை, திருவுந்தியார் "கூட்டில்வாள் சாத்தி இருத்தல்" (30) என்றும், திருக்களிற்றுப்படியார்,

"கூட்டில்வாள் சாத்தி நிற்றல்" (63) என்றும் கூறும். (கூடு = ஆன்மாவாகிய கூடு. வாள் = திருவருள்)

ஈயும் தனத்தானை :

இத்தொடரையடுதது "மோட்சசாதனம்" வருவதலால் இத்தொடர் உலகியற் செல்வம் குறித்தது. குன்றக்குடியான், வீடுபேறாகிய செல்வமும், உலகியற் செல்வமும் ஒருசேர வழங்கி மகிழ்கின்றவன் என்பதை;

"கேட்டதெல் லாமளித்து என்றும் கேடில் அரும்பொருள் தன்னைக்
கூட்டிக் கொடுத்திடும் கோவே குன்றக் குடியுறைதேவே"

-திருக்குன்றக்குடிப்பதிகம்.7

என்று பாம்பன் சுவாமிகள் கூறுவது எண்ணுக.

இதில் "கூட்டி" என்ற சொல்லாட்சி, கேட்டது உலகியற் செல்வம், கேளாதது வீடுபேறாகிய செல்வம். கேட்டதுடன், கேளாத செல்வமும் கூட்டித் தருவான் என்ற குறிப்பும் அமைந்துள்ளது.

உயர்வேதவனம் :

உயர் என்ற அடைமொழி, ஞானத்தின் உயர்ந்ததோ ஒத்ததோ வேறில்லை என்பதுணர்த்திற்று.

"ஞானத் தாய்உனை நானும் தொழுவனே"

-திருமுறை 5. தனித்திருக்குறுந்.3:4

"நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி"

-திருமுறை 6. தனித்திருத்தாண். 4:1

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்"

- திருவருட்பயன் -5

முதலியன, இறைஞானவடிவினது என்பது உணர்த்தும்.

சிலக்கணக் குறிப்பு :

கனத்தானை, வாகனத்தானை, மனத்தானை, மனத்தானை, தனத்தானை, சாதனத்தானை, வனத்தானை, வேதவனத்தானை என்பன வினையாலணையும் பெயர்கள். சிகண்டியின் வாகனம் என்பதில் சிகண்டி என்ற அடை; ஆடு, யானை முதலிய பெருமான் ஊர்திகளை விலக்கியமையால் இனம் விலக்கிய அடைமொழி. உயர்வேதம் - வினைத்தொகை.

4. தலையானை முடிதிகழும் தலையானைத் தேனாறு தழுவும் குன்றை மலையானை அசுரருக்கு மலையானை முப்பாழும் கடந்த மன்றுள் நிலையானைக் கொடியரகம் நிலையானைப் பூரணமாய் நிரைந்த ஈரார் கலையானை ஓதரிய கலையானை அனுதினமும் கருதி வாழ்வாம்.

குறிப்புரை :

தலை = தலைமை, (முடிசூடிய) தலை, தேனாறு = குன்றக்குடியின் பாலதான ஓராறு. மலையான் = குன்றக்குடித் திருமலையில் எழுந்தருளியிருப்பவன், தடுமாறாதவன். முப்பாழ் = போதப்பாழ். சீவப்பாழ், சிவப்பாழ் என்பன. மன்று = பெருவெளியான முத்தி நிலை. நிலையானை = தன் இருப்பிடமாக நிலை கொண்டவனை, நில்லாதவனை. நிரைந்த = ஒழுங்குபட்ட. ஈர்ஆர் = அன்பு நிறைந்த, கலையானை = ஒளிவடிவனை. ஓதரிய = எண்ணிச் சொல்லுதற்கரிய கலையானை = கலைகளின் வடிவனை.

பொழிப்புரை :

தலைமையனை; நவமணிகள் திகழும் திருமுடி சூடிய தலையனை; தேனாறு சூழ்ந்த குன்றக்குடித் திருமலையில் எழுந்தருளியிருப்பவனை; அசுரருடன் போரிடத் தடுமாறாதவனை; போதப்பாழ், சீவப்பாழ், சிவப்பாழ் ஆகிய முப்பாழும் கடந்த பெருவெளியான முத்தியைத் தன் இருப்பிடமாக நிலைகொண்டவனை, கொடியவர் உள்ளத்தில் நில்லாதவனை; முழுமையாய் ஒழுங்குபட்ட அன்பு நிறைந்த ஒளிவடிவனை, விரல்விட்டு எண்ணிச் சொல்லுதற்கரிய கலைகளின் வடிவானவனை நாடோறும் சிந்தித்து வாழ்வோம்.

விளக்கம் :

தலையானை :

"எல்லையில் புவனம் யாவையும் யாண்டும்
ஒல்லு மூவரும் உயிர்த்தொகை யாவும்
தொல்லை மேனிகொடு தோன்றினை யால்நீ"

- கந்தபு..திருச்செந்திப்.16:1-3

"இதழ்பொதி அவிழ்ந்த தாமரையின்
மணஅறைபு குந்த நான்முகனும்
எறிதிரைஅ லம்பு பால்உததி - நஞ்சராமேல்
இருவிழிது யின்ற நாரணனும்
உமைமருவு சந்த்ர சேகரனும்
இமையவர்வ ணங்கு வாசவனும் - நின்றுதாமும்
முதல்வ..."

- திருப்புகழ். செந்தில். உததி அறல், 3-4

என்பன இப்பெருமானின் தலைமை உணர்த்துவன.

முப்பாழும் கடந்த மன்று :

இதனைப் பரநாதவெளி என்பர். இதனை,

"அநாதியிலே, வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியை"

- கந்தர் அலங்.. 8:3

"துரியம்கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத்து ஒருபெருங் கோயிலுள்
முளையின்று முளைத்த மூலலிங்கம்"

- ஸ்ரீ குமரகுரு... மதுரைக்கலம்பகம் 103:26-28

என்றும் குறிப்பர்.

கொடியர் அகம்நிலையானை :

உயிர்களிடத்து அன்பில்லாரே கொடியர்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்" "எவ்வுயிர்க்கும் அன்பில்லார் ஈசனுக்கும் அன்பில்லார்" ஆதலின் அன்பற்ற அகம் நிலையான் என்றார்.

பூரணமாய் நிறைந்த ஈர்ஆர்கலையானை :

உலக ஒளிகள் அனைத்தும் ஓர் ஒழுங்கின்றி, தத்தம் வாய்ப்புக்கேற்பக் கூடியும் குறைந்தும் ஒளிர்ந்து அழிவன. எனவே அவை பூரணமும் ஒழுங்கும் உடையனவல்ல. அவை

சடப்பொருளாதலின் ஈரம் - அன்பு - அவற்றுக்கு இல்லையாதலின் மிக மிக நெருங்கின் தம் வெப்பத்தால் நம்மை அழிப்பன. ஆனால் பெருமானோ என்றென்றும் முழுமையும் ஒழுங்கும் தனதாக்கொண்டு, தன்னை நெருங்க நெருங்க அவரை அன்பால் அரவணைத்து இன்பம் தந்து வாழ்விக்கும் ஒளிவடிவன் என்றார்.

ஓதரிய கலை :

"ஆய கலைகள் அறுபத்து நான்கு" என்றவரையறை பண்டு; இன்று கலைகள் பலப்பலவாகப் பல்கிப் பெருகியுள்ளன. எனவே அவை எண்ணிட்டுக் கூற இயலாதனவாம்.

"உவமையிலாக் கலை ஞானம்" - என்று சேக்கிழாரும்,
"உயர்மறைநூற்கலை முடிவில் முடிந்திடும்
ஒழுகொழி மரகதமே"
- ஸ்ரீகுமர...முத்துக்குமாரசாமிபிள்ளை...தால் 8:1

என்பதும் கலைகளின் ஓதரிய எண்ணிக்கையையும், அவற்றின் வடிவாக இறைவன் உள்ளதையும் குறிப்பன.

இலக்கணக்குறிப்பு :

"தலையானை, தலையானை, மலையானை, மலையானை, நிலையானை, நிலையானை, கலையானை, கலையானை - வினையாலணையும் பெயர்கள். முப்பாழ் - பண்புத்தொகை.

5. படையானைக் கதிர்முனைவேல் படையானை அடியவர்கள் பணிந்து சூழும்
இடையானை ஒருபோதும் இடையானை விரிபுவனம் இதனைக் காக்கச்
சடையானை நதிஅணியும் சடையானைத் தொழுமுனிவ னொடும் உள்ளன்பு
உடையானை மயிலிருவர் புடையானை அனுதினமும் புகழ்ந்து வாழ்வாம்.

குறிப்புரை :

படையான் = பரிவாரத்தால் சூழப் பெற்றவன், கருவியுடையவன். கதிர்முனை = ஒளியும் கூர்மையுமுடைய. சூழும் இடை = வலமாகச் சூழும் செவ்வி. ஒருபோதும் இடையான் = எக்காலத்தும் வருந்தாதவன். சடையான் = ஒளிவடிவன். முனிவர் = அகத்தியர். மயில் இருவர் = வள்ளி தெய்வானையர். புடை = இருபுறமும்.

பொழிப்புரை :

எந்நேரமும் பரிவாரத்தால் சூழப்பெற்றவனை; ஒளியும் கூர்மையுமுடைய வேல் படையனை; அடியவர்கள் பணிந்து வலம் வரும் செவ்வியனை; யார்க்கும் ஒரு காலத்தும் வருந்தாதவனை; அகன்ற இவ்வுலகைக் காக்க ஒளிவடிவு கொண்டவனை, கங்கையைத் தன் தலையில் கொண்ட ஒளிவடிவு கொண்டவனை; வணங்கும் அகத்தியர் மீது உள்ளன்பு உடையவனை; வள்ளி தெய்வயானை ஆகியவர்களை இருபுறமும் கொண்டவனை நாடோறும் புகழ்ந்து வாழ்வோம்.

விளக்கம் :

படையானை :

இப்பெருமானுக்குத் தேவர்கள் அனைவரும் பரிவாரங்கள். "வானோர் வணங்குவில் தானைத் தலைவ" என்று போற்றுவார் நக்கீரர்.

கதிர்முனைவேல் :

வேல், ஞானத்தின் குறியீடு. இது ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியது. பகைவெல்லலும், வழிகாட்டலும் ஞானத்திற்கும் வேலுக்கும் உரிய பொதுத் தன்மைகள். பெருமானால் எக்காலத்தும் உடன் ஏந்தப் பெறுவது குறித்து வேல், உடம்பிடி எனப்படும்.

"கடம்புசூடி உடம்பிடி ஏந்தி" என்பது சிலப்பதிகாரம். வேலை மட்டும் நட்டு, முருகனாக எண்ணி வழிபடுவதும் தமிழ் வழக்கு.

பணிந்து சூழும் இடையானை :

மேலானவர்களைக் கண்டுகொள்ளச் செல்வோர் செவ்வியறிந்தே செல்வர், இதுவே உலகியல். இப்பெருமானைக் கண்டு வணங்கக் காலம் நேரம் கருத வேண்டுவதில்லை என்பதை, பணிந்து என்று இறந்த காலத்திலும், சூழும் என்று எதிர்காலத்திலும் கூறி, நிகழ் காலத்தைப் பெறவைத்தார். எக்காலமாயினும் கண்டு வணங்கலாம் என்பது குறிப்பு.

ஒருபோதும் இடையானை :

மிகப்பலர், காலம் நேரம் கருதாது ஒருவரைச் சூழ்ந்திருப்பின், சூழப்பெற்றவர்க்குச் சலிப்போ வருத்தமோ நேர்வது இயல்பு. ஆனால், பெருமான் நிலை இதுவன்று என்பதை,

"நீர்கொண்ட சடையானும் நெடியோனும் நான்முகனும்
சீர்கொண்ட கனகநகர்த் தேவர்களும் முனிவோரும்
காதலித்துப் புகழ்கூறிக் கரம்குவித்துப் பணிவது கண்டு
ஆதரவின் அளவுதெரிந்து அருள்புரியச் சலியாமல்
கோகனகமலர் முகத்தில் குறுநகை பூத்து"
திருக்குன்றக்குடிக் கலம்பகம்.1.தரவு

என்பார் வண்ணச் சரபர்.

முனிவனொடும் உள்ளன்பு உடையான் :

அகத்தியர்மீது கொண்ட பெருமானின் உள்ளன்பை, அவருக்குப் பிரணவம் உபதேசித்தமை, நீறு வழங்கியமை மூலம் அறியலாம். இவற்றை,

"ஈசனுக்கும் குறுமுனிக்கும் எழில்அருணைப் புலவனுக்கும்
பேசரிய பிரணவத்தின் பெரும்பொருளை அறிவித்தாய்"
- திருக்குன்றக்குடிக் கலம்பகம்.1:தாழிசை 2:1-2

என்றும்,

"மேடவடி வானவனை நீறு செயு மாமுனிவன்
வினையொழித் திட்டுமிக்கு உறநீறு தந்தன"
- திருக்குன்றக்குடிக்கலம்பகம். பா11:1.

மயில் இருவர் புடையானை :

உயிர்களின் நலவாழ்வுக்கும் உயர்வுக்கும் ஞானம் - அறிவு - இன்றியமையாதது. இது விருப்பத்தின் வழிப்பட்ட செயற்பாட்டில் விளைவது. வேலேந்தியாகிய பெருமான் ஞானமயன். வள்ளிநாச்சியாரும் தெய்வயானை அம்மையும் முறையே விருப்பம் (இச்சை) செயற்பாடு (கிரியை) ஆகியவற்றின் குறியீடுகள் ஆவர். இவ்விருவர் புடைசூழ உள்ள இவனை வழிபடுவோர் நல்லவிருப்பமும், செயற்பாடும் ஞானமும் பெறுவர் என்பது தத்துவநெறி. பின்வரும் பா 11 இல் "தழுவும் இருமயிலானை" என்று மேலும் கூறி ஆற்றுப்படுத்துகிறார் இவர்.

இலக்கணக் குறிப்பு :

படையானை, படையானை, இடையானை, இடையானை, சடையானை, சடையானை, உடையானை, புடையானை - வினையாலணையும் பெயர்கள். கதிர்முனை - உம்மைத் தொகைகள். விரிபுவனம், தொழுமுனிவன் - வினைத்தொகைகள். மயில் - உவமையாகுபெயர்.

6. மயத்தானைப் பரசைவச மயத்தானைத் திரண்டபெரு மலைபோல் வீறும்
புயத்தானைப் பொலிமுகஅம் புயத்தானைத் தனைஅறிந்த புனித மாக்கள்
வயத்தானைச் சரிந்தபெரு வயத்தானை அடவிதனில் வரவே நாடுஇ
தயத்தானை அறுவிழிஉ தயத்தானை அனுதினமும் சார்ந்து வாழ்வாம்.

குறிப்புரை :

மயம் = நிறைவு. பரம் = மேலான, வீறும் = பெருமையுறும். அம்புயம் = தாமரை. மாக்கள் - மக்கள் - ஞானியர். வயம் = வசப்படுதல், வெற்றி. அடவி = மனமாகிய மலைக்காடு, உதயம் = தோன்றுதல்.

பொழிப்புரை :

என்றும் நிறைவாக உள்ளவனை; மேலான சைவ சமயத்துக்குரியவனை; திரட்சியும் பெருமையும் தனதாகக் கொண்ட மலைபோன்ற திருத்தோளனை; பொலிவுடன் திகழும் தாமரை முகத்தனை; தன்னை உணர்ந்த ஞானியர் வசப்படுகின்றவனை; தன்பால் ஒருசேரச் சரிந்த பெருவெற்றியனை; நம் மனமாகிய மலைக்காட்டில் எழுந்தருள விரும்பும் திருவுளத்தனை; சிவபெருமானின் ஆறுநெற்றிக்கண்ணில் தோன்றியவனை; நாடோறும் மனம்மொழி மெய்யால் பொருந்தி வாழ்வோம்.

விளக்கம் :

மயத்தானை :

"குறைவிலாநிறைவே" என்பார் திருவாதவூரடிகள். "அங்கிங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி" என்பார் தாயுமான அடிகள்.

பரசைவ சமயத்தானை :

சிவபெருமானே முருகன் என்பதால் சைவ சமயத்தான் என்றார். "எங்கள் சிவபெருமானே" என்று திருக்குன்றக்குடிப் பதிகத்தில் (10:3) முருகனை விளித்து மகிழ்வார் பாம்பன் சுவாமிகள்.

திரண்டபெரு மலைபோல் வீறும்புயத்தானை :

திரண்ட மலை, பெருமலை என்று கூட்டுக. திண்மையும் பருமையும் கொண்டு, தன்னைச் சார்ந்தவர்க்கு மரங்களால் நிழலும், தண்மையும், பல்வகைவளங்களையும் வழங்கும் இயல்புடையது மலை. அதுபோல் பெருமானின் திருத்தோள்கள் திண்மையும் பருமையும் கொண்டு, தன் அடியார்களுக்கு அருள் நிழலும். உயிர்க்குத் தண்மையும், பல்வகை இன்பங்களும் வழங்குவன என்க.

தமையறிந்த புனிதமாக்கள் வயத்தானை :

"நான்ஆர் என் உள்ளம் ஆர் என் ஞானங்கள் ஆர் என்னையாரறிவார் வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்" என மாணிக்கவாசகரும், "தம்மையுணர்ந்து தமையுடைய தன் அறிவார்" என்று சிவஞான போத அவையடக்கமும் கூறுமாறு தமையறிந்தவர்களைப் புனித மாக்கள் - மக்கள் - என்றார். திருச்செங்கோடு - "வண்டார்" - திருப்புகழில்

"பண்சார நைந்து நின்றோதும் அன்பர்
பங்காகி நின்ற - குமரேசா"

என்ற அருணகிரியார் வாக்கு, பெருமான் அடியாரைச் சார்தல் மட்டுமன்றிப் பங்காளனாகவும் ஆவதைக் குறிக்கும்.

அடவி தனில் வரவே நாடு இதயத்தானை :

பொதுவாக மனம், கல்லும் முள்ளும் புதரும் மண்டி, கொடிய விலங்குகள் உலவும் மலைக்காடு ஒத்தது. காடு திருத்திக் கழனியாக்க விரும்புவோர், அக்காட்டிலேயே தங்கி வாழ்வது வழக்கம். நம்மனக்காட்டைத் திருத்திப் பண்படுத்த விரும்பும் பெருமான், அதில் எழுந்தருளும் இதயத்தானாக இருப்பதையே விரும்புகின்றவன் என்றார்.

"உள்ளம் பெருங்கோயில்" என்பார் திருமூலர்.

("பெருங்கோயில்" என்றது எந்த ஒரு நிகழ்வாலும் எந்த ஒரு காலத்திலும் அதன் அழியாமை குறித்தது. மனம் - உயிர் - இத்தகையதே என்க)

"மனத்தகத்தான்" என்பார் அப்பரடிகள்.

வள்ளிமலைக் காட்டில் வள்ளிநாச்சியார் பொருட்டு வரவிரும்பிய இதயத்தான் எனினும் பொருந்தும். ஏற்றது கொள்க.

அறுவிழி உதயத்தானை :

"சிற்பரன் தான்கொண் டுள்ள திருமுகம் ஆறு தன்னில்
பொற்புறு நுதற்கண்தோறும் புலிங்கம்ஒன் றொன்று தந்தான்"

- கந்தபுரா...திருவவதாரம்....44:3-4

(புலிங்கம் = தீப்பொறி)

என்ற கச்சியப்பரையும்

"ஐந்து முகத்தோடு அதோமுகமும் தந்து
திருமுகங்கள் ஆறுஆகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறுஉய்ப்ப"

- கந்தர்கலி வெண்பா. 76-77.

என்ற ஸ்ரீ குமரகுருபர அடிகளையும் நினைப்பித்தார்.

இலக்கணக் குறிப்பு :

மயத்தானை, சமயத்தானை, புயத்தானை, அம்புயத்தானை, வயத்தானை, பெருவயத்தானை, இதயத்தானை, உதயத்தானை - வினையாலணையும் பெயர்கள். சைவசமயம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பெருமலை - பண்புத்தொகை. மலைபோல் வீறும்புயம் - உவமையணி. பொலிமுகம் - வினைத்தொகை. முகஅம்புயம் - உருவகம். அடவி - மனம் குறிக்கும்போது உருவகம். மக்கள், மாக்கள் ஆனது செய்யுள் விகாரம்.

7. வாரானை மிடியர்எதிர் வாரானைத் தனைவணங்கும் அடியர் துன்றப்
பாரானைப் புலையர்முகம் பாரானைப் பத்தியுடன் பரவார்க்கு இன்பம்
தாரானைக் கமமுமலர்த் தாரானை உறுதிசெயும் தகையோர் நெஞ்சம்
பேரானைப் புகலஒண்ணாப் பேரானை அனுதினமும் பேணி வாழ்வாம்.

குறிப்புரை :

வாரானை = தன்பால் வருக என்று அழைக்கின்றவனை, வராதவனை. மிடியர் = மனவறுமையர். குன்ற = தம்நிலையில் தாழ, பாரானை = காணப்பொறுக்காதவனை, ஏறெடுத்தும் காணாதவனை, புலையர் = ஊன் உண்பார். தாரானை = தராதவனை, மலர்மாலை அணிந்தவனை. உறுதி = நன்மை. தகையோர் = தகுதிவாய்ந்தவர். பேரானை = என்றும் நிலைபெயராதவனை, புகழாளனை.

பொழிப்புரை :

உயிர்க்குலத்தைத் தன்பால் வருக என்று அழைக்கின்றவனை; மனவறுமைப்பட்டவர் எதிரில் வராதவனை; தன்னை வணங்கும் அடியவர்கள் தம் நிலையில் தாழக்காணப்பொறுக்காதவனை; ஊன் உண்பார்முகத்தை ஏறெடுத்தும் காணாதவனை; அன்புடன் தன்னை வணங்காதவர்கட்கு இன்பம் தராதவனை; மணக்கும் மலர்மாலை அணிந்தவனை; நன்மை செய்யும் தகுதி வாய்ந்தவர் உள்ளத்தைவிட்டு நிலைபெயராதவனை; சொல்லுதற்கரிய புகழாளனை நாடோறும் அகத்தில் பேணி வாழ்வோம்.

விளக்கம் :

வாரானை :

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் வாரானை என்பது ஆறாவது பருவம். தளர்நடையிடும் குழவியைத் தன்பால் வருக என்று அழைக்கும் செய்தியுடையது இது. அவன்மீது அன்பு பாராட்டுவதில் தளர்நடையிடும் நம்மைத் தன்பால் வருக என்று அழைப்பவன் பெருமான் என்றார்.

மிடியர் :

இவன், செல்வர் வறியர் என்ற பாகுபாடு பாராதவன். எனவே மிடியர் என்றது மனவறுமையாளரையே. அருணகிரிநாதரும் கந்தர் அநுபூதியில்

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடிஅந் தமிலா அயில்வேல் அரசே
மிடிஎன்று ஒருபா விவெளிப் படினே.19

இதில் "மிடி" வரின் நல்ல மனமும் குடிபோகும் – என்றமையால் இங்கு மிடி = மனவறுமை எனப்பெற்றது.

புலையர் முகம்பாரானை :

கௌமார சமயக்கொள்கைகளுள் கொல்லாமை, ஊன் உண்ணாமை இரண்டும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. "தினற் பொருட்டால் கொல்"வது உலகு ஆதலின் புலையர் – ஊன்தின்பவர் எனப் பெற்றார். ஊன் தின்பார் பெருமானை நோக்கினும், அவன் இவர்களை ஏறெடுத்தும் பாராமைக்குக் காரணம்; உயிர்க்குலம் அனைத்தையும் தன் பிள்ளைகளாகக் கருதும் அவன் திருவுளமே.

பத்தியுடன் பரவார்க்கு இன்பம் தாரானை :

வழிபாட்டில் பிறவற்றினும் பத்தி – அன்பு – ஒன்றே இன்றியமையாதது.

"அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தஒண் ணாதே"

திருமந்திரம் 272:3-4

– அன்பன்றித்

"தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யும் அவை
சாற்றும் பழமன்றே தான்"

திருக்களிற்றுப் 55:2-4

"பொக்கம் மிக்கவர் பூவும் நீறும்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"

திருமுறை 5. தனித்திருக்குறுந் 9:3-4

முதலியன வழிபாட்டில் அன்பின் இன்றியமையாச் சிறப்பை உணர்த்தும்.

உறுதி செயும் தகையோர் நெஞ்சம் பேரானை :

உலகில், நேரிடையாகவும் மறைமுகமாகவும் பிறர் செய்யும் உறுதிகளை – நன்மைகளை நாமும் பிறர்க்குச் செய்யக் கடமைப் பட்டுள்ளோம். இதனை "ஒப்புரவு அறிதல்" – "ஒத்தது அறிதல்" என்பார் ஐயன் திருவள்ளுவர். இங்ஙனம் வாழ்வாரே வாழ்வராதலின்

இவர்களைத் தகையோர் என்றும், இவர்கள் நெஞ்சமே இறைவனது "புக்கில்" என்றும் கூறினார்.

இலக்கணக் குறிப்பு :

வாரானை, வாரானை, பாரானை, பாரானை, தாரானை, தாரானை, பேரானை, பேரானை என்பன வினையாலணையும் பெயர்கள். மிடியர், பரவார், தகையோர் என்பனவும் அவை. தனை, செயும் இடைக்குறைகள். ஒண்ணா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

8. நகத்தானைக் குறுமுனிதன் அகத்தானைப் பலவளமும் நாடும் பேர்ஏர் அகத்தானைத் துதிசெய்வார் அகத்தானை எண்திசையோர் நாடும் தஞ்ச முகத்தானை இளங்கதிர்போல் முகத்தானை முவுலகில் முதிர்ந்த சீலர் மகத்தானை ஐந்தொழில்நே மகத்தானை அனுதினமும் வழுத்தி வாழ்வாம்.

குறிப்புரை :

நகம் = மலை. குறுமுனி = அகத்தியர். பேர்+ஏர்+அகத்தான் = மக்களின் அழகிய மனத்தன். தஞ்ச முகம் = அடைக்கலம் புகுமிடம். சீலர் = நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையவர். மகத்தான் = (மகம்=இன்பம்) இன்ப அனுபவமானவன். நேம் அகத்தான் = (நேம் = நியமம்) நியமமாக மனத்தில் கொண்டவன்.

பொழிப்புரை :

மலைகள் தோறும் எழுந்தருளியிருப்பவனை; அகத்திய முனிவரின் உள்ளத்தவனை; உலகியலில் பலவகை நலங்களையும் நாடும் மக்களின் அழகிய மனத்தவனை; தன்னைத் துதிப்பவர் அகத்தவனை; எட்டுத் திசையோரும் அடைக்கலம் புக நாடும் இடமானவனை; இளஞாயிறு ஒத்த திருமுகத்தனை; மூன்று உலகங்களிலும் உள்ள நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களின் இன்ப அனுபவமானவனை; படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் தனது நியமமாக மனங்கொண்டவனை நாடோறும் வாழ்த்தி வாழ்வோம்.

விளக்கம் :
நகத்தான் :

"சேயோன் மேயமைவரை உலகமும்" என்பது தொல்காப்பியம். "குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் கோயில்" என்பது பழமொழி. ஆதலின் நகத்தான் ஆயினன்.

பலவளமும் நாடும் பேர்ஏர் அகத்தான் :

நாம் துய்த்தற்குரிய வளங்கள் எல்லாம் அவன் உறையும் அவன் உடைமைகள். இவற்றை நாடுவோர் அழகிய-தூய-உள்ளத்தவராதல் வேண்டும். அறன் ஈனும் இன்பமும் ஈனும் வளத்தை ஈட்டவல்ல இவர்கள் உள்ளமே ஏர்அகம். இத்தகைய உள்ளத்தில் எழுந்தருளிப் "பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் தருவான்" என்றார்.

தஞ்சமுகத்தான் :

அடைக்கலம் புகுவார், தன்னினும் வலியராய், தாம் வேண்டுவன எல்லாம் உடைய ஈகையரிடம் அடைக்கலம் புகுதல் உலகியல். பெருமான் எல்லாமுடையவன், வலியரினும் வலிய கொடைஞன் ஆதலின் தஞ்ச முகத்தானாயினன்.

இளங்கதிர்போல்முகம் :

மாயிரு ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்.

-திருமுரு... 91-92

"தினகரன் எனும் ஒளி முகனே வருக"

-மதுரகவி ஆண்டவரின் சந்த வருகைப்பதிகம் : 12

"- சோதி

இளம்பரிதி நூறுஆயிரம் கோடி போல
வளம்தரு தெய்வீக வடிவும் -

- கந்தர்கலி...கண்ணி.56-57

காணும்கண்கூசாச் செவ்வொளி, உச்சி ஞாயிறு போன்று எரிக்காது உயிர்க்குலத்திற்கு ஆக்கப் புத்துயிர்ப்பு வழங்கல், இருளும் பனியும் ஓட்டுதல் போல் மலநீக்கம் அருளுதல் என்பன இளஞாயிற்றுக்கும் பெருமான் திருமுகத்திற்கும் உள்ள சில பொதுத் தன்மைகள்.

முதிர்ந்த சீலர் மகத்தான் :

அப்பன் நீ அம்மைநீ அன்புடைய மாமனும் மாமியும் நீ.... என்று காணும் பொருள்களில், அனுபவிக்கும் பொருள்களில் எல்லாம் பெருமானையே கண்டு இன்புறுதலால் முதிர்ந்த சீலர் மகத்தான் - இன்ப அனுபவமாக விளங்குகின்றவன் என்றார்.

ஐந்தொழில் நேம் அகத்தான் :

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் தமது நியமமாக் கொண்டு நிற்பவன் பெருமான். "ஐந்தொழிலுமேவித் தனிநடத்தும் எம்கோவே" என்பார் ஸ்ரீ குமரகுருபர அடிகள். இதில் "ஐந்தொழிலுமேவி" என்று கொள்ளுங்கால் "ஐந்தொழிலையும் தானே பொருந்தி நின்று" என்றும், "ஐந்தொழிலும் ஏவி" என்று கொள்ளுங்கால் "ஐந்தொழிலையும் செய்யுமாறு பிரமன் முதலாயினோரை ஏவி" என்றும் பொருள் காணலாம்.

"ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடியும்" என்றும் அவர் கூறுவார்.

இலக்கணக் குறிப்பு :

நகத்தானை, அகத்தானை, அகத்தானை, அகத்தானை, முகத்தானை, முகத்தானை, மகத்தானை, நேமகத்தானை - வினையாலணையும் பெயர்கள். குறுமுனி - குறு - இனம் விலக்கிய அடைமொழி. எண்திசையோர் மூவுலகு. இளங்கதிர், ஐந்தொழில் - பண்புத் தொகைகள். இளங்கதிர் போல் முகம் - உவமையணி.

9. முடியானை மணிபதித்த முடியானைக் கருமைநிற முகிலார் குன்றக் குடியானை அடியர்மனக் குடியானை மாறாது கொடுக்கும் அன்னக் கொடியானைப் பொருசேவற் கொடியானைக் குகன்என்றே குவியார் நெஞ்சம் படியானை ஏழேழு படியானை அனுதினமும் பரவி வாழ்வாம்.

குறிப்புரை :

முடி = தலைமை, திருமுடி - கிரீடம். குடியான் = குடிகொண்டவன். மாறாது = வினைப்பயன் மாறாமல். அன்னக்கொடியான் = நான்முகன். பொரு = குட்டிச் சிறையிட்ட. குகன் = நம்மனக் குகையில் வாழ்பவன். படியான் = பொருந்தாதவன், ஏழேழு படியான் = 14 உலகங்களுக்கும் உரியவன்.

பொழிப்புரை :

அனைவர்க்கும் தலைமையனை; நவமணிகள் பதித்த திருமுடி சூடியவனை; சூல்கொண்ட மேகம் சூழும் குன்றக்குடியானை; அடியவர் மனத்தில் குடிகொண்டவனை; அவரவர்க்குரிய வினைப்பயனை அவரவர்க்கே மாறாமல் கொடுக்கும் அன்னக்கொடியுடைய நான்முகனைக் குட்டிச் சிறையிட்ட சேவற்கொடியுயர்த்தியவனை, நம் மனக்குகையில் இருப்பவன் என்று எண்ணி மனமும் கையும் குவியாதவர் உள்ளத்தில் பொருந்தாதவனை, பதினான்கு உலகங்களையும் தனக்கே உரிமையாக உடையவனை நாடோறும் பரவி வாழ்வோம்.

விளக்கம் :

முடியானை :

"புரையுநர் இல்லாப் புலமையோய்"

- திருமுருகா...280

(புலமை = ஞானம்)

"ஒருமுதல் எனும்ஒரு பொருளே வருக"

- மதுரகவி ஆண்டவரின் சந்த வருகைப் பதிகம் 2:1

"அருமறை யவன்முதல் அரிஅரன் மகபதி
அனங்கன் இமையோர் - இனங்கள்ஒருபால்
அருணனும் மதியமும் அனல்எழுகனலியும்
அணங்கி னொடு சூழ்"

- கணங்கள் ஒருபால்

.....

"தினகரன் உலவுச நிதியினில் இரவலர்
தெளிந்த தமிழே" - பொழிந்தது ஒருபால்
"சிவபர கிரியினில் ஒருசிவன் வடிவொடு
திருந்த முருகோன் இருந்த கொலுவே".
-அருணகிரியார் அருளிய கொலுவகுப்பு

என்று அருணகிரியார் கூறுவதன் மூலம் இப்பெருமானின் தலைமையை உணரலாம்.

அடியர்மனக் குடியானை :

"நினைப்பவர்மனம் கோயிலாக் கொண்டவன்"
- திருமுறை 5 கோயில் 1:2
"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்"
- திருமுறை 6. திருக்காளத்தி 5 : 1
"சரணடைந்தார் நெஞ்சம் கொண்டார்"
- திருமுறை 7 திருநின்றியூர் : 5 : 3-4

முதலியன பெருமானின் குடியிருப்பு உணர்த்தும்.

மாறாது கொடுக்கும் அன்னக்கொடியான் :

நான்முகன், அவரவர் வினைக்குரிய பயனை அவரவர்க்கே மாறாது விதிப்பவன் ஆதலின் "விதி" என்று பெயர் பெற்றான். இவனது விதித்தலை இவன் "கைஎழுத்து" என்றும், அதுநம் "தலைமேல் இடப்பெற்றது" என்றும் அருணகிரியார்,

".....அவன், கால்பட்டு அழிந்தது இங்கு என்தலை மேல்
அயன் கையெழுத்தே"
- கந்தர்அலங். 40:4

என்பார்.

சேவற்கொடியானை :

பெருமானின் கொடி இலச்சினை சேவல் என்பதறிவோம். அது செந்நிறக் கொண்டையும் வெண்ணிற உடம்பும் கொண்டது என்பதை

"செந்நிறக் குடுமிவெண் சேவல் பதாகையாய்"
-திருச்செந்தூர்முருகன் பிள்ளைத்தமிழ்

என்பதால் அறியலாம்.

கவியார் நெஞ்சம் படியான் :

"ஏத்திடார்க்கு அரிய முத்தபாத் தமிழ்கொடு
ஏத்தினார்க்கு எளிய - பெருமாளே"
- திருப்புகழ் : திருத்தணிகை வட்டவாள்தன

என்பார்.

ஏழேமுபடியான் :

இதனை
"அண்டபகி ரண்டமும் நிறைந்த குகன்"
வண்ணச்சரபர் - குன்றக்குடித்தல வகுப்பு : 1:1

என்பது காட்டும்.

இலக்கணக்குறிப்பு

முடியானை, முடியானை, குன்றக்குடியானை, மனக்குடியானை, கொடியானை, கொடியானை, படியானை, படியானை - வினையாலணையும் பெயர்கள். கருமைநிறம் - பண்புத்தொகை. பொருசேவல் - வினைத்தொகை. சேவற்கொடி - சேவல் - இனம் விலக்கிய அடைமொழி.

10. மாயானை ஒருபொழுது மாயானை அடவிதனில் வருகஎன்று ஓதும்
வாயானை அமுதம்இழி வாயானை அருமறைகள் வணங்கப்பெற்ற
தூயானை எனக்கினிய தூயானைத் தொழுதுஇறைஞ்சித் துதியார்க்கு ஒன்று
ஈயானை விழியில்வரும் தீயானை அனுதினமும் சேர்ந்து வாழ்வாம்!

குறிப்புரை :

மாயானை - அழிவே இல்லாதவனை, பெரிய யானை வடிவான விநாயகப் பெருமானை. அடவி - வள்ளிமலைக்காடு. தூயான் - வேண்டுதல் வேண்டாமை இல்லாத தூயவன்; வீடுபேறாய் விளங்குகின்றவன்.

பொழிப்புரை :

அழிவே இல்லாதவனை; வள்ளிநாச்சியார் பொருட்டுப் பெரிய யானை வடிவான விநாயகப் பெருமானை ஒருமுறை வள்ளிமலைக் காட்டில் வருக என்று நினைவாற் கூறியவனை; உயிர்களை வாழ்விக்கும் அமுதச் சொற்களையே கூறுகின்றவனை; அரிய மறைகள் வணங்கப் பெற்ற விருப்பு வெறுப்பு இல்லாதவனை; எனக்கு இனிய வீடுபேறாக விளங்குகின்றவனை;

கைகூப்பித் தொழுதும் இறைஞ்சியும் - எண் உறுப்புகளும் நிலம்பட வணங்கியும் துதிக்காதவர்களுக்கு ஒரு நலமும் வழங்காதவனை; சிவபெருமானின் நுதற்கண் தீ ஆனவனை நாடோறும் மனத்தாற் பொருந்தி வாழ்வோம்.

விளக்கம் :

மாயான் :

"இறப்பிலார் பிணியில்லார் தமக்குஎன்றும் கேடு இலார்
பிறப்பில்லாப் பெருமானார்"

- திருமுறை 3. திருப்பெருவேளூர். 7:3-4

"முன்னைப் பிறப்பு இறப்பு இலாதவர்"

- திருமுறை 1. திருத்தருமபுரம் 5:2

முதலியன பெருமானின் மாயாநிலை குறிப்பன.

ஒருபொழுது .... வாயானை :

விநாயகப் பெருமானை வருக என்று வள்ளிமலைக் காட்டில் நினைந்ததை,

"தன்னே ரிலாதமரும் தந்திமுகத்து எந்தைதனை
முன்னே வருவாய் முதல்வா என நினைந்தான்"

- கந்தபுரா... வள்ளியம்மை திருமண 110 : 3-4

என்று கூறுவார் கச்சியப்ப சிவாசாரியார்.

அமுதம் இழிவாயானை :

பெருமான் சொற்கள் அழிப்பனவல்ல; எந்நாளும் உயிர்களை வாழ்விப்பன என்றார்.

வணங்கப்பெற்ற தூயான் :

"தூஉய்மை என்பது அவாஇன்மை" என்பது பொய்யா மொழி. தூய்மை என்பது தூஉய்மை என்று அளபெழுந்ததால் எதிலும் அளவற்ற தூய்மையை வலியுறுத்தினார். பெருமான் எக்காலத்தும் வேண்டுதல் வேண்டாமையிலான் - அவா இலான் - ஆதலின் தூயான் என்றார்.

எனக்கு இனிய தூயான் :

நூலாசிரியராகிய மதுரகவி ஆண்டவரின் விருப்பம் என்றென்றும் இனிமை நல்கும் வீடுபேறு என்பது புலனாகிறது.

"எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவன்"

- திருமுறை 8 திருவம்மானை 12:5-6

முதலாக வருவன அவனே வீடாவான் என்பது குறிக்கும்.

துதியார்க்கு ஒன்று ஈயானை :

..... அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகஉருவாய்க் கிடக்குது ஐயோ; இன்புற்றிட நாம் இனிதெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே.

- தாயுமானார். காகம் உறவு...1-4

என்றும்

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்"

- திருவருட்பயன் 1-9.

என்றும் கூறுவனவற்றால், அனைத்துயிர்க்கும் பொதுவனை, நாமே முயன்று சென்று அனுபவித்தல் வேண்டும் என்பது பெறப்படும். நாம் அவனை அனுபவிக்க அவன் நிற்பதால் அவனை ஈகின்றவன் என்றும், ஈயாதவன் என்றும் அவன்மேல் வைத்துக் கூறுவது மரபு.

விழியில் வரும் தீயான் :

"அறுவிழி உதயத்தானை" என்றார் முன்னும் (பா 6:4)

இலக்கணக்குறிப்பு

மாயானை, வாயானை, வாயானை, தூயானை, தூயானை, ஈயானை, தீயானை, துதியாதார்க்கு - வினையாலணையும் பெயர்கள். வருக - வியங்கோள் வினைமுற்று. இழிவாயானை - வினைத்தொகை. அருமறைகள் - பண்புத்தொகை. தொழுது இறைஞ்சி - உம்மைத்தொகைகள். ஒன்று - ஒன்றும் என்பதன் உம்மை தொக்கது.

11. மயிலானைத் தழுவும்இரு மயிலானை அவனியதை வலமாய்வந்த
ஒயிலானை மதிக்கஒண்ணா ஒயிலானை ஒருவன்என உதியார் நெஞ்சில்
பயிலானை மறைஇன்னம் பயிலானைக் கவிராசர் பாடிப் போற்றும்
அயிலானைச் சூர்கடிந்த அயிலானை அனுதினமும் அடைந்து வாழ்வாம்.

குறிப்புரை :

மயிலான் - சூரனாகிய மயில் பரியுடையவனை, இருமயிலார் - வள்ளி தெய்வயானை அம்மையர். அவனி - உலகம். ஒயிலானை - அலங்காரத்தனை, பேரழகனை. உதியார் - உறுதிதோன்றாதவர். பயிலான் - பழகாதவன், செறிக்கப்பெறாதவன். அயிலான் - முருகன், வேலேந்தி. அடைந்து - மனத்தால் அடைந்து.

பொழிப்புரை :

சூரனாகிய மயில் பரி நடத்துகிறவனை; இருபுறமும் வள்ளி தெய்வயானை அம்மையாரால் தழுவப் பெற்றவனை; ஒரு கனியின் பொருட்டு உலகை வலம்வந்த அலங்காரத்தனை; அளவிட்டுக் கூறவியலாத பேரழகனை; இவனே நமது இறை என்ற உறுதி தோன்றாதவர் உள்ளத்தில் பழகாதவனை; நான்மறைகளால் இன்னமும் கூடத் தம்பால் செறிக்கப்பெறாதவனை; கவியரசர்கள் பாடிப்போற்றும் முருகனை, சூரபன்மனைத் தடிந்து ஆட்கொண்ட வேலேந்தியை நாடோறும் மனத்தால் அடைந்து வாழ்வோம்.

விளக்கம் :

மறை இன்னம் பயிலானை :

திருமுறைகள் பதிஞானம் ஆதலால் திருமுறைகள் பெருமானை - இறைவனைச் செறித்தவை. இதனை அவற்றின் செயற்கருஞ் செயல்கள் உணர்த்தும். "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்" என்பது, நான்மறைகளால் பெருமான் செறிக்கப்பெறாத நிலையை உணர்த்தும். "வேதங்கள், வடமொழி வேதங்கள் ஆகிய இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பன. அவை இறைவனை ஐயா! என அழைக்கவும், அவ்வேதங்கள் பாசஞானமாதலின் இறைவன் அவற்றிற்கு அகப்படாது உயர்ந்தும் பரந்தும் ஆழ்ந்தும் விளங்குகின்றான் என்பது கருத்து. "குருஅருள்விளக்கம்" (பக்.24) விருத்தியுரை.

சூர்கடிந்த அயிலான் :

அருள்தரு சண்முகநாதப்பெருமானது உடம்பிடி, சூரனைத் தடிந்து சேவலும் மயிலுமாக ஆட்கொண்டது குறித்தார்.

வேல், மாமுதல்தடிய, சூரன் சேவலும் மயிலுமாகி அமர்த்தொழில் கருதி வந்தான்.

"குக்குட உருவை நோக்கிக் கடிதில்நீ கொடியே ஆகி
மிக்குயர் நமது தேரின் மேவினை ஆர்த்தி"

- சூரபன்மன்வதைப்... 497 : 2-3

என்றும்,

"சூர்திகழ் மஞ்ஞை ஏறிச் சுமக்குதி எம்மை"

- சூரபன்மன்வதைப்... 499 : 3

என்றும் ஆட்கொண்டமையைக் கச்சியப்பர் போற்றுவார்.

இலக்கணக்குறிப்பு :

மயிலானை, மயிலானை, ஒயிலானை, ஒயிலானை, பயிலானை, பயிலானை, அயிலானை, அயிலானை - வினையாலணையும்பெயர்கள். ஒண்ணா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உதியார் - வினையாலணையும் பெயர்.

- திருச்சிற்றம்பலம் -

உ

அருட்டிரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம்

1. *பூமுடி விண்ணவர் வாழ்வும் பூதல மன்னவர் வாழ்வும்*
தாமுடி நாகர்கள் வாழ்வும் சுந்தர நின்அடி யார்கள்
தாமுறு வாழ்வினுக் கேஓர் சற்றும்நே ராகுமோ நாகர்
கோமுனி வோர்தொழும் கோவே குன்றக் குடிஉறை தேவே.

கூட்டுமுறை :

சுந்தர, நாகர்.... தேவே, பூமுடி .... நேராகுமோ? என்னையும் உன் அடியாராக ஏற்று அருள்க என்று வருவித்துக் கூட்டிமுடிக்க.

குறிப்புரை :

சுந்தர = அழகே வடிவானவனே. நாகர் = பாதாள உலகினர். கோ = தலைமை சான்ற. கோவே = அண்டங்களுக்கெல்லாம் பேரரசனே. தேவே = தெய்வமே. பூமுடி = வேள்வி நெருப்புப் போன்ற செந்நிறத் தலைமுடி. (பூ – வேள்வி நெருப்பு) பூதலம் = பொலிவு சான்ற இவ்வுலகம்.

பொழிப்புரை :

அழகே வடிவானவனே; பாதாள உலகினரும் தலைமை சான்ற முனிவர்களும் தொழும் அண்டங்களுக்கெல்லாம் பேரரசனே. குன்றக்குடியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் தெய்வமே; வேள்வி நெருப்புப் போன்ற செந்நிறத்தலைமுடியுடைய தேவர்கள் வாழ்வும், பொலிவு சான்ற இந்நிலவுலக மன்னர்கள் வாழ்வும், தூய முடியுடைய பாதாள உலகினர் வாழ்வும் உன் அடியார்கள் பெறும் பெருவாழ்வினுக்கு ஒரு சிறிதாவது ஒப்பாகுமோ? ஒப்பாகாது. என்னையும் உன் அடியானாக ஏற்று எனக்கும் அவ்வாழ்வு அருள்க.

விளக்கம் :

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் கைபுனைந்து இயற்றாக்கவின்பெறுவனப்பன். "சுக்குக்கு விஞ்சிய மருந்தில்லை

சுப்பிரமணியனுக்கு விஞ்சிய தெய்வமில்லை" என்பது பழமொழி. இதற்கேற்ப உயிர்க்குல மலநோய் தீர்த்து நலமேயான சுந்தரத்தை அவற்றுக்கு அருள் இறைவன் ஆதலின் அவனைச் "சுந்தர" என்று விளித்தார்.

யான் எனது என்னும் செருக்கினை முனிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் இயல்பினால் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அருள்பமுத்த பெருவாழ்வினராதலின் முனிவோர், "கோ" என்ற அடைமொழி பெற்றனர்.

முனிவர் தொழுதலாவது மனம் வாக்கு காயத்தால் அவன் பணியே பற்றி ஒழுகுதல்.

தன் அருள்வெளிக்குள்ளே அகிலாண்ட கோடி எல்லாம் தங்கும் படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தவன் பெருமான். இவன் உயிர்க்குலத்துக்கு இம்மை நலங்கள் வழங்குவது பற்றி இவனைக் "கோவே" என்றும் மறுமையில் வீட்டின்பம் நல்குவது பற்றித் "தேவே" என்றும் இப்பதிகப் பாக்கள் தோறும் மகுடம் அமைத்துள்ள சிறப்புக் கண்டு மகிழ்க.

விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டு இருந்து அருள்புரிகின்ற சிவம் இவனேயாதலின் அருட்டிரு குமரகுருபர அடிகள் இவனைச் "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள" என்ற தொடரை மகுடமாக வைத்துத் தமது முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் போற்றுகிறார். "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள்" என்ற தொடர் இந்திரன் முதலிய பதத்தினரைக் குறிப்பது. மணம் = நன்னிலை – பதவி. இவர்களையும் இப்பதவிகளையும் தானே ஒருசேர ஆள்கின்றவன் ஆதலின் இவனைத் "தேவே" என்று விளித்தார். இவன் "சிவபெருமானே" என்பதை அடிகளின் பத்தாம் திருப்பாடலில் காண்க.

மனிதர்க்கும் விண்ணவர்க்கும் உள்ள உடம்பு வேறுபாடுகள் பலவற்றுள் ஒன்று, அவர்தம் தலைமுடி நமது கருமுடிபோலன்றிச் செம்மைநிற ஒளி வீசுவது என்பது நம் இலக்கிய மரபு. இதுபற்றி அடிகள் விண்ணவர் தலைமுடியின் செந்நிற ஒளிக்கு, வேள்வி நெருப்பின் செந்நிற ஒளியை உவமை கூறினார்.

"வளிவழங்கும் மல்லல் மாஞாலம்" (காற்று இயங்குகின்ற வளப்பம் வாய்ந்த இவ்லகம்) என்ற பொய்யாமொழியையும், "பிற உலகங்களில் யாதொன்றும் உயிரின நல்வாழ்வுக்குரியதாக இதுவரை காணப்பெறவில்லை" என்ற விண்வெளி விஞ்ஞானியரின் கருத்தையும் உட்கொண்டது "பூதலம்" என்ற தொடர்க்குரிய பொருள்.

"நேராகுமோ?" என்றாலே நேராகாது என்ற பொருள் தருமாயினும் "ஓர் சற்றும்" என்ற அடையால் ஒருசிறிதளவுகூட நேராகாது என்று வலியுறுத்தினார்.

யான் எனது என்ற இருபற்றுடைமையும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூணாத் தன்னலவாழ்வும் செத்துப் பிறத்தலும் முதலியன உடையவர்கள் விண்ணவரும் பூதலமன்னவரும் நாகரும் ஆதலின், இவற்றுள் ஏதுமில்லா அடியார் அருள்வாழ்வுக்கு முற்கூறியோர் வாழ்வு "ஓர்சற்றும் நேராகாது" எனப்பெற்றது.

2. *ஆறுச மயங்கள் எங்கும் ஆனந்த மாய்விளை யாடி*
ஈறுமு தல்நடு ஏதும்இ லா(து)அவிர் உன்னடி நேடி
நீறு)அணி தொண்டர்கள் வாழ்வே நித்தியம் என்(று) ஒருவாய்மை
கூறும றைபுகழ் கோவே குன்றக் குடியுறைதேவே.

கூட்டுமுறை :

ஆற்றொழுக்கு. இத்தகுதொண்டர்கள் பெருவாழ்வை எனக்கும் அருள்க என்று வருவித்துக்கூட்டி முடிக்க.

குறிப்புரை :

ஆறு சமயங்கள் = சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்ற அகச்சமயங்கள். ஆனந்தமாய் = கடவுளாக. விளையாடி = அருள்விளையாட்டயர்ந்து, ஈறு முதல்நடு = உயிர்க்குலத்துக்குள்ள இறப்பு, பிறப்பு, காப்பு. அவிர் = ஒளிரும். நேடி = அவாவி. நித்தியம் = அழிவற்றது. வாய்மை = பிழைபடாச்சொல்.

பொழிப்புரை :

ஆறு வகைப்பட்ட அகச்சமயங்களிலும் அவ்வவற்றின் கடவுளாக அருள்விளையாட்டயர்ந்து (உயிர்க்குலத்துக்குள்ள) இறப்பு பிறப்பு காப்பு என்ற மூன்றும் தனக்கில்லாது ஒளிரும் உன் திருவடியையே அவாவி, அதனை அடையும் பொருட்டு வெண்ணீறு துதையும் உன் தொண்டர்கள் வாழ்வே அழிவற்றது - வீடுபேற்றுக்குரியது என்ற ஒப்பற்ற பிழைபடாச் சொல்கூறும் மறைகள் ஒக்கப் புகழும் கோவே; குன்றக்குடி உறை தேவே; உன் தொண்டர் பெருவாழ்வை எனக்கும் அருள்க.

விளக்கம் :

"சிவபெருமானே முருகன்" என்பது முருகனடியார் உட்கோள்.
"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல் பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்"
- கந்தபுராணம் திருவிளையாட்டு...19

என்பார் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார். "என் உயிர்க்கு ஒக்கும் இளஞ்சேய்" என்று முருகனைத் தமது உயிராகப் போற்றிக்கூறிய ஸ்ரீ குமரகுருபர அடிகள், சிவபெருமானுக்குரிய சிறப்புகள் அனைத்தையும் தமது கந்தர் கலிவெண்பாவில் முருகனுக்கும் உரியனவாக ஓதுதலாலும், அருட்டிரு பாம்பன் சுவாமிகள் "ஆறுசமயங்கள்தோறும் ஆனந்தமாய் விளையாடி" என்று முருகனைக் குறித்தார்.

மக்களின் விளையாட்டு; தான்வெற்றிபெற வேண்டும் என்ற தன்னயப்பும், பெருமுயற்சியும், பரிசு விழைதலும், பிறர் வெற்றியுற்றால் அவர்மீது அழுக்காறு, சினம் முதலியன கொள்ளுதலும், இடைவெளியும் உடையன. ஆனால் பெருமான் விளையாட்டு தன்னயப்பற்றது. மிக மிக எளிதில் - நினைப்பளவில் நிகழ்வது, பரிசுதனக்கன்று உயிர்க்குலத்துக்கே என்று அவற்றுக்கு வீடுபேறாகிய பரிசளிப்பது, வெற்றிபெற்ற உயிர்க்குலம் மீது அழுக்காறு முதலியன அற்றது. இடைவெளியே இல்லாது, முத்தொழிலையும் இடைவெளியின்றிச் செய்வது. எனவே அது அருள்விளையாட்டாகும். கம்பரும் "அலகிலா விளையாட்டுடையார்" என்பது எண்ணுக.

பெருமானின் மூவகை விளையாட்டினையும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்று கூறுவதே உலகியல். இதனை முறைமாற்றி "ஈறு முதல் நடு" (அழித்தல், படைத்தல், காத்தல்) என்று அடிகள் குறித்ததேன்?

"ஒடுங்கி" என்ற சிவஞானபோதச் சொல்லுக்கு (சூத்1:2) மாதவச் சிவஞான முனிவர், அது ஒடுக்குகின்றவனைக் குறிக்கும். "அனைத்தையும் தன்னுள் ஒடுக்குதலாகிய சங்காரத் தொழிலைச் செய்யும் கடவுளே உலகிற்கு முதற்கடவுள்" என்று விளக்குகின்றார். சிவபரம்பொருளாகிய முருகனின் இச்சீர்மையைத் திருவுளங்கொண்டே அடிகள் "ஈறு" என்ற சொல்லை முதலில் வைத்தார்.

படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்றில் பிற இரண்டும் நடுவணாகிய காத்தற் பொருட்டேயாதலின் "சிறப்புடைப் பொருளைப் பிற்படக்கிளத்தல்" என்ற இலக்கண மரபையொட்டி, காத்தலாகிய நடுவணதை "நடு" என்ற சொல்லால் ஈற்றில் வைத்தார்.

படைக்கப்பெற்ற அனைத்தும் காத்தல், அழித்தற்கு உரியனவாதலின் இம்மூன்றில் முதலாவதான படைத்தலை, "அரிமாநோக்கில்" இரண்டிற்கும் நடுவில் வைத்தார் என்க.

"போதம் தருவது நீறு புன்மை (ஆணவமலம்) தவிர்ப்பது நீறு" என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. எனவே மலம் கெடவும் ஞானம் பெறவும் அதனால் வீடுபேறுபெறவும் அதற்குக் காரணமான நீற்றினை அடியார் அணிவர். அதனை முக்காலமும் முறைப்படி அணியும் அடியார் செயலை "நீறு அணிதொண்டர்" என்று முக்காலத்துக்கும் ஒத்த "அணி" என்ற அடை கூட்டிக் குறித்தார் அடிகள்.

முருகன் திருவடியே பிறவிப் பெருங்கடல் நீந்திக்கடக்க முயல்வார்க்கு வாய்த்த கலங்கரைவிளக்கம் என்பது புலனாகவும்; அது உலகத்துக்கலங்கரை விளக்கம்போல் விட்டுவிட்டு ஒளி காட்டுவதன்று, நாற்புறத்தும் ஒருசேர எக்காலத்தும் ஒளிர்வது என்பது தோன்றவும் முக்காலத்துக்கும் ஒத்த "அவிர்" என்ற அடையுடன் "அவிர்உன்னடி" என்றார்.

இலக்கணக் குறிப்பு :

ஆறு சமயங்கள் - தொகைக்குறிப்பு. ஈறுமுதல்நடு - உம்மைத் தொகைகள். அவிர் உன்அடி, அணிதொண்டர், கூறுமறை - வினைத்தொகைகள், உன்அடி - சினையாகுபெயராய்ப்பெருமானைக் குறித்தது. வாழ்வே - தேற்றேகாரம்.

3. நாசமில் லாஉயிர் எல்லாம் நற்கதி சேரஎன் றேஓர்
மாசில்உ ருக்கொண்டு) அங்கு மன்னுதிருக்கோயில் கொண்டு
தேசிக னாய்அவிர் அன்பைச் சிந்தையில் வைத்துள்ள என்றன்
கூசல்அ றுத்தருள் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

கோவே... தேவே, நாசமில்லா உயிர்.... ஓர் மாசில், மன்னு தேசிகனாய், திருக்கோயில் கொண்டு, அங்கு அவிர் அன்பை.... அருள்.

குறிப்புரை :

நாசமில்லா உயிர் = அழிவற்ற உயிர். நற்கதி = வீடுபேறு. ஓர்மாசில் உரு = ஒப்பற்ற குற்றமற்ற திருவுரு. மன்னு = நிலையான, தேசிகனாய் = ஒளியைச் சொரிகின்றவனாய் (தேசு+இகு+அன். இகுதல் - இகு = சொரிதல் - சொரி) அவிர் = ஒளிர். கூசல் = அச்சம்.

பொழிப்புரை :

கோவே; குன்றக்குடியுறை தேவே; அழிவற்ற உயிர்க்குலம் எல்லாம் வீடுபேறு அடையும் பொருட்டாகவே ஒப்பற்ற குற்றமற்ற திருமேனி தாங்கி, நிலையாக ஒளியைச் சொரிகின்றனவாகத் திருக்கோயில் கொண்டுள்ள உன்பால், ஒளிரும் அன்பைச் சிந்தையில் வைத்துள்ள எனது இறப்பு பிறப்பு பற்றிய அச்சத்தைத் தீர்த்தருள்க.

விளக்கம் :

"உடம்பே அழிவது; உயிர் எக்காலத்தும் அழியாதது என்பதை உணர்த்த "நாசமில்லா உயிர்" எனப்பெற்றது. "மன்னுயிர்" என்ற

பொய்யாமொழியையும், "பதியினைப் போல் பசுபாசம் அநாதி" என்ற திருமந்திரத்தையும் நினைவூட்டுகிறது.

ஓரறிவு முதலான அனைத்து உயிர்களின் பயணமும் வீடுபேறு நோக்கியதேயாதலின் எல்லாம் என்றனர்.

மாசற்ற ஞானத்திருவுருவே சிவபரம்பொருள் திருவுரு என்பார், "மாசில் உருக் கொண்டு" என்றார்.

"சிவனோடு ஒக்கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார்இங்கு யாவரும் இல்லை"

திருமந்திரம் - 5:1-2.

என்பதால் ஓர் - ஒப்பற்ற - என்ற அடையுடன் "ஓர் மாசில் உரு" என்றார்.

உலகிற்கு ஒளிசொரியும் ஞாயிறு திங்கள் ஆகியன என்றும் நிலைத்து ஒளிதருவனவல்ல; ஒரு நாள் அழியக் கூடியன என்பது மெய்ப்பொருளியலாரும், விஞ்ஞானியரும் கூறும் செய்தி. ஆனால் என்றும் நிலைத்து நின்று ஒளி சொரிகின்றவன் பெருமான் ஒருவனேயாதலின் ஞாயிறு திங்களிலிருந்து பெருமானைப் பிரித்து உணர்த்த "மன்னு" அடைமொழி பெய்து "மன்னு தேசிகனாய்" என்றார்.

நம்மவர் அச்சம் பல திறத்தன. ஞானிகள் அச்சம் ஒன்றே. அது பிறப்பு, இறப்புப் பற்றியது. பிறப்பு அச்சம் வாழ்நாள் வீணாகிவிடுமோ என்பதால் நிகழ்வது. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்ற அப்பரடிகள்,

துறக்கப் படாத உடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்று என் உள்ளம் கிடந்து மறுகிடுமே.

(திருமுறை.4.தனித்திருவிருத்தம்.8)

(மறுகிடும் = என்நெஞ்சு குழம்புகிறது) என்பார்.

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதுஆகுமோ" என்பதும் பிறவியச்சம் பற்றியதே. "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்" என்ற மணிமொழியும் நோக்குக.

இலக்கணக் குறிப்பு :

இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சேரஎன்றே - தேற்றேகாரம். எல்லாம் - எல்லாமும் என்பதன் உம்மை குறைந்தது. அவிர் அன்பு - வினைத்தொகை. கூசல் - தொழிற்பெயர்.

4. *ஆதிஅ நாதியும் நீயாய் அண்டகோ டிளங்கும் நீயாய்த்*
தீதில்உ யிர்க்(கு)உயிர் நீயாய்த் திகழ்ஒரு பூரணம்தன்னை
மேதினி மீது(ல்) உள்கு வோரே விஞ்(சு) அறிவு) ஆக்கம்உள் ளோர்கள்
கோதில்வெ யில்அயில் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

கோதில்....தேவே; ஆதி... பூரணம் தன்னை, உள்குவாரே மேதினிமீது விஞ்சு.... உள்ளோர்கள்.... உன்னையே உள்கும் நிலையை எனக்கும் அருள்க என்று வருவித்துக் கூட்டி முடிக்க.

குறிப்புரை :

ஆதி=கால எல்லைக்குட்பட்ட பழைமை. அநாதி = கால எல்லைக் குட்படாத பழைமை. அண்டகோடி=அண்டவெளியிலுள்ள கோடிக் கணக்கான உலகுகள். தீதுஇல்=இறப்பில்லாத, ஒரு=ஒப்பற்ற. பூரணம் = நிறைவு - நிறைவாய் உள்ள பொருள். விஞ்சு=மேலான. அறிவு = ஞானம். ஆக்கம்=உயர்வு. விஞ்சு அறிவு, விஞ்சு ஆக்கம் என்று தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க. கோதுஇல்வெயில்=குற்றமற்ற ஒளி. அயில்=வேல் - ஞானத்தின் குறியீடு.

பொழிப்புரை :

குற்றமற்ற ஒளிவீசும் ஞானத்தின் குறியீடான வேல் ஏந்திய கோவே; குன்றக்குடியுறை தேவே; கால எல்லைக்குட்பட்ட பழம்பொருளும், கால எல்லைக்குட்படாத பழம்பொருளும் நீயேயாய்; அண்ட வெளியிலுள்ள கோடிக்கணக்கான உலகுகள் அனைத்தும் நீயேயாய்; இறப்பில்லாத உயிர்க்கு உயிர் நீயேயாய்த் திகழும் ஒப்பற்ற நிறைவான உன்னை நினைக்கின்றவரே, இவ்வுலகில் மேலான ஞானமும் உயர்வும் உள்ளவர்கள், உன்னையே நினைக்கின்ற பேற்றை எனக்கும் அருள்க.

விளக்கம் :

இறைவனின் அநாதிநிலையாவது அம்மையைத் தன்னுள் ஒடுக்கி நிற்கும் பரநிலை - ஞானநிலை.

இறைவனின் ஆதிநிலையாவது ஐந்தொழில் புரிய அம்மையைத் தன் இடப்பாகம் கொண்ட அம்மையப்பர் நிலை. இந்த ஆதிநிலையை வாதவூரடிகள்.

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ"

- திருக்கோத்தும்பி.18

என்று போற்றுகிறார். இதனை இவர் "தொன்மைக்கோலம்" என்பது நினைக.

ஆதி, அநாதி நிலைகளை மாணிக்கவாசகரே

"1முன்னைப் பழம்பொருட்கும் 2முன்னைப் பழம்பொருளே"

என்று சுருங்கவும் கூறுகிறார்.

1. முன்னைப் பழம்பொருள் - ஆதிநிலை - தொன்மைக்கோலம்.
2. முன்னைப் பழம் பொருள் - அநாதிநிலை - ஞானவடிவம்.

அண்டவெளியிலுள்ள கோடிக்கணக்கான உலகங்களை அடிகள், "அண்டகோடி" என்றார். இதன் தன்மையை வாதவூரடிகள்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெரும் காட்சி"

- திருவண்ட...1-2

(உருண்டை என்பது உண்டை என்று மருவியது, பிறக்கம்=தொகுதி.

அண்டப் பகுதியில் உலகுகள் உருண்டையாக உள்ளன, தொகுதிகளாக உள்ளன, அளவின்றிக் கோடி கோடியாக உள்ளன, வளமான பெருந்தோற்றமுடையன என்ற

இன்றைய விண்வெளியியலார் கருத்தை உட்கொண்ட பகுதி இது. இச்செய்தி, மிகச் சுருக்கமாக அடிகளால் "அண்டகோடி" எனப்பெற்றது.

"நீ எதனைச் சதாநினைத்துக் காண்டிருக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்" என்பது உளவியல். ஞானமயனாகவும் மீஉயர் நிலையினனாகவும் உள்ள இறைவனை நினைப்பவர் அவனது இவ்விரு நிலைகளையும் பெறுவர் என்பதை "உள்குவாரே விஞ்சு அறிவு ஆக்கம் உள்ளோர்கள்" என்றார்.

இறைவனின் இருப்புக்குப் பேரெல்லை, ஓரளவு காணத்தக்க அண்ட கோடி. மீச்சிற்றெல்லை கண்ணால் காண இயலா உயிர் என்று கூறி அவனது அளவிலாற்றல் உணர்த்தினார்.

உலக ஒளிப்பொருள்கள் யாவும் காணக்கண் கூசுவன, தொட அல்லது நெருங்கச் சுடுவன, வெப்பமும், புகையும், இறுதியும் முதலிய குற்றங்களில் சிலவோ பலவோவுடையன. ஆனால் குன்றக்குடியானின் உடம்பிடியாகிய வேல் ஒங்கி ஆழ்ந்து அகன்று நுண்ணியது மட்டுமன்றி, ஒளிப்பொருட்கட்குக் குறித்த குற்றங்கள் ஏதும் இல்லாதது. ஆதலின் அது "கோதில்வெயில் அயில்" எனப்பெற்றது.

இலக்கணக்குறிப்பு

ஆதி அநாதியும் - உம்மைத் தொகை. அநாதியும் - இறந்தது தழுவிய எச்சவும்மை. திகழ்ஒருபூரணம் - வினைத்தொகை.

பூரணம் - பண்பாகு பெயர். அறிவுஆக்கம் - உம்மைத் தொகைகள்.

5. மாஅலர்க் கொந்தள வள்ளி மையல் சிக்கிய மாயக்
காவல உன்அடி யாரைக் கண்டவர்க் கும்துயர் தீரும்
தாவில்அ கம்குளிர் கொள்ளும் சத்திய கேவலம் விள்ளும்
கூவிஅ முங்கும்என் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

கோவே....தேவே; மாஅலர்....அழுங்கும். இத்தகு அடியார் வாழ்வை எனக்கு அருள்க என்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை :

மா=மாட்சிமை. அலர் = மலர். கொந்தளம் = மகளிர் கூந்தல். மையல் = உணராமை. மாயம் = வேடம். தாவில் = பகைமை இல்லாத. சத்திய கேவலம் = துக்கமும், துன்பமும். விள்ளும் = பிளக்கும். கூவி அழுங்கும் = கூக்குரலிட்டுக் கெடும்.

பொழிப்புரை :

என்கோவே, குன்றக்குடியுறை தேவே, மாட்சிமை பொருந்திய மலர்கள் சூடிய கூந்தலையுடைய வள்ளி நாச்சியாரின் உணராமையில், மீளவியலாது சிக்கியவன்போல் பலவேடம் பூண்ட காவலனே; உன்னையேயன்றி உன் அடியாரைக் கண்டவர்க்கும் துயரம் தீரும்; பகைமையில்லாத அவர் உள்ளம் குளிர்ச்சியடையும்; அவர்களது துக்கமும் துன்பமும் பிளந்து கூக்குரலிட்டுக் கெடும். ஆதலின் உன்னையேயன்றி உன்அடி யாரையும் காணும் பேற்றினை எனக்கும் அருள்க.

விளக்கம் :

மா என்பது அழகு, வண்டு, மாட்சிமை என்ற பலபொருள் தருமாயினும், மாட்சிமையுள்ள மலரிடத்தில் பிறவும் இருத்தல் இயல்பாதலின் இங்கு மா = மாட்சிமை எனப்பெற்றது.

மையல் = வள்ளி நாச்சியாரின் உணராமை, அஃதாவது தன்னை ஆட்கொள்ள வந்தவன் பரம்பொருளே என்பது உணராமை.

வள்ளி நாச்சியாரை ஆட்கொள்ள முருகப்பெருமான் கொண்ட திருவேடங்கள் அனைத்தும் "மாயம்" = வேடம் எனப்பெற்றன. வேடம் பலவாயினும் குறிக்கோள் காத்தலேயாதலின் "காவல" என்று விளிக்கப்பெற்றான்.

இயற்கைக் காந்தத்துடன் பலகால் முறையாக உராயும் இரும்புத் துண்டும் காந்தத் தன்மைபெறும். அதுபோல, ஞானவடிவான பெருமானை மட்டுமன்றி அவன் திருவடியைத் தமது உள்ளத்தால் வருடி வருடி இன்புறும் அடியவரும் காந்தநிலை – ஞானநிலை எய்துவர். ஆதலால் பெருமானை மட்டுமன்றி அவன் அடியாரைக் கண்டவர்க்கும் ஞானம் வாய்த்தலால் "துயர்தீரும்" என்றார்.

ஞானம், பகையுணர்வில்லாததாதலின் ஞானம் வாய்த்த அடியார் உள்ளம் "தாவில் – பகைமையில்லாத " உள்ளம்எனப்பெற்றது. துயர்தீர மனம் குளிர்தலும்; இதனால் துக்கமும் துன்பமும் பிளந்து குரல்எழுப்பிக் கெடுதலும் காரண காரிய நிகழ்வுகள் என்க.

இலக்கணக்குறிப்பு :

அடியாரைக் கண்டவர்க்கும் – பெருமானைக் கண்டவர்க்கேயன்றி என்று எச்சப்பொருள் தரும் இறந்தது தழுவிய எச்சவும்மை. சத்திய கேவலம் – எண்ணும்மைத் தொகைகள்.

6. *எட்டுஉருத் தெய்வமும்நீயே எட்டுக்கு அதீதமும் ஆயே*
தட்டுப் படாதஅ தீத சாமியும் நீஎன ஓர்வார்
முட்டுப்ப டாமல்வந்து என்றும் முற்றுச்செ யும்அருட்பொன்னைக்
கொட்டிக் கொடுக்கின்ற கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

ஆற்றொழுக்கு. அடியவர் ஒரும் நிலையை எனக்கும் அருள்கஎன்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை :

எட்டுஉருத்தெய்வம் = எண்வகைத் திருமேனிகள் தாங்கிய தெய்வம் – சிவம். எண்வகைத் திருமேனிகளாவன நிலம், நீர், தீ, வளி, விண், ஞாயிறு, திங்கள், உயிர் என்பன. இதனை வடமொழியில் "அட்டமூர்த்தம்" என்பர். அதீதமும் ஆயே = மேம்பட்டதெய்வமும் நீயே ஆகி, தட்டுப்படாத = ஞானியர்க்கேயன்றிப் பிறர்க்குப் புலனாகாத. சாமி = ஞானவடிவன். ஓர்வார் = ஆராய்ந்து அறிந்த அடியவர். முட்டுப்படாமல் = வறுமையுறாமல் .என்றும் முற்றுச்செய்யும் = எக்காலத்தும் முழுமையுறச் செய்கின்ற. அருட்பொன் – உன் திருவருளாகிய பெறற்கரும் செல்வத்தை. கொட்டிக் கொடுக்கின்ற = அளவு குறியாது வாரி வழங்குகின்ற.

பொழிப்புரை :

நிலம், நீர், தீ, வளி, விண், ஞாயிறு, திங்கள், உயிர் என்கிற எண்வகைத் திருமேனி தாங்கிய தெய்வமும் நீயே ஆவாய், இந்த எட்டுக்கு

மேம்பட்ட தெய்வங்களும் நீயே ஆவாய்; ஞானியர்க்கேயன்றிப் பிறர்க்குப் புலனாகாத மிக மிக மேம்பட்ட ஞானவடிவனும் நீயே ஆவாய் என்று ஆராய்ந்து அறிந்த அடியவர், வறுமையுறாமல் எக்காலத்தும் அவர்களை முழுமையுறச் செய்யும் உன் திருவருளாகிய பெறற்கரும் செல்வத்தை அவர்கட்கு அளவு குறையாது வாரி வழங்குகிற கோவே! குன்றக்குடியுறை தேவே! அத்தகு அடியார் வாழ்வை எனக்கும் அருள்க.

விளக்கம் :

உலகியல் தழைக்க, பெருமான் ஞானவடிவுடன், எண்வகைத் திருமேனியும் கொண்டு அருள்புரிவதைக் காரைக்கால் அம்மையார்;

"அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்(று) ஆவான் - அவனே
இயமானன் ஆய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து"

- அற்புதத்திருவந்தாதி.21

என்பார்.

"நிலம்நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

- தொல்.பொருள்.635

(கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற்போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்: இளம்பூரணர் உரை.)

ஐம்பூதக்கலப்பும் மயக்கமுமே இவ்வுலகம் என்பது தொல்காப்பியர்க்கு மட்டுமன்றி இன்றைய அறிவியலார்க்கும் உடன்பாடே. உயிர்க்குலத்துக்குரிய உடம்புகளும் மற்றும் பிறவும் வாழவும், வளரவும் இருக்கவும் உதவுவன இருசுடர்களாதலின் அவற்றை முதலிலும், இவை அனைத்தின் உறுபயன் துய்ப்பன உயிர்களேயாதலின் இயமானனை இறதியிலும் அம்மையார் வைத்தார்.

எண்வகைத் திருமேனிகட்கு மேம்பட்ட - அதீத - நிலை ஒன்பது. அவை அயன், அரி, அரன், மகேசன் என்ற உருவ நிலைகள் நான்கும், விந்து, நாதம் சத்தி, சிவம் என்ற அருவுருவ நிலை நான்கும், சதாசிவமாகிய அருவநிலை ஒன்றுமாகும்.

"அதீத சாமி" என்றது முற்கூறப்பெற்ற எல்லா நிலைகட்கும் மேம்பட்ட ஞானத்திருவுரு. இதனை

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்" - திருவருட்பயன் - 5

என்பார் உமாபதியார்.

(அறிஞர் = ஞானியர். அறிவாம் உரு = ஞானத்திருவுரு)

இந்த ஞானத்திருவுரு ஞானியர்க்கே புலனாவது என்பதை அப்பரடிகளும்

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நான்அலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழுக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே.

- திருமுறை.5. தனித்...3

என்பதால் அறிகிறோம்.

"சாமி" என்ற சொல் ஞானவடிவனாகிய இறைவனைக் குறிப்பது. இச்சொல்லின் இன்றைய வழக்குப்பற்றி அசதியாகும் நம் அடிகள்.

"எண்ணரிய உயிர்கள்எலாம் நீயிருக்கும் மூர்த்தம்என இயம்பு நூலோர்
தண்ணளிசால் "சாமி"எனும் பெயர் உனக்கும் சொலிஇந்தத் தரணி யோர்க்கும்
விண்ணவர்க்கும் விளம்பிடுதல், "சம்பு"எனும் இறைமொழியை நரிக்கும் மீப்போம்
வண்ணஇப நாவலுக்கும் வழுத்துதலை ஒக்கும் என்பார் வடிவேலோயே"

- பாம்பன்... குமாரனந்தலகரி.5

"சம்பு" என்ற சொல் சிவமாகிய உனக்கே பொருந்துவதிருக்க, உலகோர் அதனை நரிக்கும்; நாவல் மரத்திற்கும் வழங்குவது போல, "சாமி" என்னும் சொல் ஞானவடிவனாகிய உனக்கே பொருந்துவதிருக்க அதனை, இவ்வுலகில் உள்ள சிலர்க்கும் விண்ணவர்க்கும் வழங்குகின்றாரே! இது எப்படிப் பொருந்துமோ என்று நகைச்சுவை புலப்படக் கூறுகிறார்.

திருவருளைப் பொன்னாக உருவகித்தது, அது வீடுபேற்றை மட்டுமன்றி இம்மை நலன்களையும் அருள்வது என்பதால்.

முட்டுப்படாமையாவது மனத்தால், வாழ்வியற் பொருள்களால் வறுமையுறாமை.

கொடுத்தகோ என்றோ கொடுக்கும்கோ என்றோ கூறாது "கொடுக்கின்ற கோவே" என்றது ஏன்?

முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே. – நன்னூல். சொல். 383

என்ற இலக்கணத்தையொட்டி, குன்றக்குடியான் நேற்றும் இன்றும் நாளையும் வழங்குகிறவன் என்று உணர்த்துதற்பொருட்டு.

இலக்கணக்குறிப்பு :

எட்டுஉருத்தெய்வம் = தொகைக் குறிப்பு. தெய்வமும், அதீதமும், சாமியும் = எண்ணும்மைகள். நீயே ஆயே = தேற்றேகாரங்கள். முட்டு – முதனிலைத் தொழிற்பெயர். அருட்பொன் – உருவகம்.

7. பாட்டின் உனைப்புகழ்ந் தேமண் பாட்டை ஒழித்துள்ள அன்பர்
நாட்டில்இ ருக்கினும் காட்டை நண்ணிஇ ருக்கினும் அன்றே
கேட்டதெல் லாம்அளித்(து) என்றும் கேடில்அ ரும்பொருள் தன்னைக்
கூட்டிக்கொ டுத்திடும் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

பாட்டின்.... கேட்டதெல்லாம் அன்றே அளித்து,
என்றும்.... தேவே; இவ்வகையில் எனக்கும் அருள்க என்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை :

மண்பாடு = இவ்வுலகத் துன்பங்கள். நண்ணி = அடைந்து. அன்றே = அப்பொழுதே. என்றும் = எக்காலத்தும். கேடுஇல் = தன்மேலான நிலையில் சற்றும் கெடாத. அரும்பொருள் = வீடுபேறு.

பொழிப்புரை :

பாட்டின் மூலம் உன்னைப் புகழ்ந்து போற்றி, அதனால் இவ்வுலகத்துத் துன்பங்களை ஒழித்துவாழும் உன் அடியார், பலரோடு நாட்டில் இருந்தாலும், தனித்துக் காட்டில் இருந்தாலும், அவர்கள் கேட்டவற்றை எல்லாம் அப்பொழுதே அருளி, எக்காலத்தும் தன்மேலான நிலையில் சற்றும் கெடாத பிறர்க்குக் கிடைத்தற்கரிய வீடுபேற்றையும் ஒருசேர அருளும் கோவே, குன்றக்குடியுறை தேவே, எனக்கும் இவ்வகையில் அருள்க.

விளக்கம் :

வழிபாட்டில் பாட்டே சிறப்புடையது. "அருச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும்வாயார்" என்று சிவமே அருளியதாகச் சேக்கிழார் கூறுகிறார்.

பாட்டின் இசை; பாடுகின்றவர், பாட்டுடைத் தலைவன், கேட்போர் ஆகிய முத்திறத்தாரையும் தன்னுடன் பொருந்த – இசைய – செய்வதாதலின் இசை எனப்பெற்றது. இசை, உயிர்க்குலம் அனைத்தையும் தன்பால் ஈர்த்து மெய்ம்மறக்கச் செய்வது. குறிஞ்சி நிலத்துக் கொடிச்சியின் பாடல், தினைதின்ன வந்த யானையை மெய்ம்மறக்கச் செய்து உறங்கவைத்ததை அகம் 102ஆம் பாடல் உணர்த்தும். ஆனாயநாயனாரின் குழல் இசை மாண்பினைச் சேக்கிழார் ஏழு பாடல்களில் உணர்த்துவதும், தாலாட்டில் குழந்தைகள் மெய்ம்மறந்து உறங்குவதும் கண்கூடு. ஆதலின் "பாட்டின் உனைப்புகழ்ந்தே மண்பாட்டை ஒழித்துள்ள அன்பர்" என்றார் அடிகள்.

மண் என்பது ஆழமான பொருள் பொதிந்த சொல். மண் = அணு, கழுவு என்ற இருபொருளும் தருவது.

"மண்திணிந்த நிலனும் – புறம். 2:1

என்பதற்கு "அணுச் செறிந்த உலகம்" என்பது பழையவுரை. இவ்வுரையின் தன்மை "அணுக்களால் ஆக்கப்பெற்றனவே இவ்வுலகும் இவ்வுலகியற் பொருள்களும்" என்ற அறிவியல் நோக்கில் அமைந்தது.

மண்பாட்டை – மண் – கருவியாகுபெயராய் உலகம் குறித்தது.

புறத்துறைகளுள் ஒன்று "மண்ணுமங்கலம்" என்பது. அரசன் நீராடி – தன்னைக்கமுவி – மங்கலப்படுத்திக் கொள்வது குறித்த துறை இது. எனவே மண் = கமுவு. இவ்வுலகம் உயிர்க்குலத்தின் மும்மல மாசுகளைக் கமுவிக்கொள்ள வாய்த்தது என்பது மெய்ப்பொருளியல் உண்மை. இவ்விடத்தில் மண் என்பது தொழிலாகுபெயராய் இவ்வுலகம் குறிக்கிறது.

இங்ஙனம் இருவேறு நுண்கருத்துகளையும் உள்ளடக்கியதாய் "மண்" என்ற சொல்லாட்சி இங்கு அமைந்துள்ளது.

எப்போதும் இனியானை – பரம்பொருளை – நீ எங்கிருந்தும் நினைக்கலாம் என்பார், "நாட்டில் இருக்கினும் காட்டை நண்ணியிருக்கினும்" என்றார். சுந்தரர்,

எங்கேனும் இருந்து உன்அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்து என்னோடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட்டு எனைஆளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே!
– திருமு.7. கழிப்பாலை.2

என்பதும் எண்ணத்தக்கது.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"
– திருமுறை.12. சாக்கியநாயனார் : 6

என்பது சேக்கிழார் வாக்கு.

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்கள் அனைத்தும் நிலையில்லாதன; ஒருகாலத்தில் கெடுவன. எக்காலத்தும் கெடாத பொருள் வீடுபேற்றின்பம் என்பதால் அது "கேடில்" என்றும், அது கிடைத்தற்கு அரியவற்றுள் எல்லாம் அரியது ஆதலின் அருமை – அரு – என்றும் ஈரடைகள் பெற்றுக் "கேடில் அரும்பொருள்" எனப்பெற்றது.

தன் அடியவர் கேட்ட இம்மை இன்பத்தை மட்டுமன்றி, வீட்டின்பத்தையும் கூட்டி வழங்குகின்ற வள்ளல் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமான் என்பதால் "அரும்பொருள் தன்னைக் கூட்டிக் கொடுத்திடும் கோ" எனப் பெறுகிறான்.

இலக்கணக்குறிப்பு :

மண் = அணுக்களால் ஆன உலகினைக் குறிப்பின் கருவியாகுபெயர். மண் = மலம் கமுவ வாய்த்த உலகு என்று குறிப்பின் தொழிலாகுபெயர். இருக்கினும், இருக்கினும் = எண்ணும்மைகள். எல்லாம் = எல்லாமும் என்பதன் கடை குறைந்து வந்தது.

8. *ஈடில்இ ணைமலர்த் தாள்கள் எண்ணுவது உம்கழல் அன்பர்*
தேடுஒரு ஞானமும் நல்லோர் சேர்க்கையு மேநிலை யாம்என்று
ஓடுஇழி சிந்தையை வாங்கி உன்னும்ம காசிவ யோகில்
கூடிஅ ளாவுறு கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

ஓடு இழிசிந்தையை வாங்கி, அன்பர் எண்ணுவது, கழல்நிலை ஈடில்இணைமலர்த்தாள்களும், அன்பர் தேடு ஒரு ஞானமும், நல்லோர் சேர்க்கையுமே ஆம் என்று உன்னும் மகாசிவயோகில்... தேவே; அத்தகு அன்பர் நிலையை எனக்கும் அருள்க என்று வருவித்துக்கூட்டுக.

குறிப்புரை :

ஓடுஇழிசிந்தை = ஓடு சிந்தை, இழிசிந்தை என்று தனித்தனிக் கூட்டுக) மதயானைபோல் கண்டபடி ஓடித் தன்நிலையில் தாமும் மனம். வாங்கி = தடுத்துமீட்டு. கழல்நிலை = வீரக்கழல் நிலைத்த, ஈடுஇல் = ஒப்பற்ற, இணை = இரண்டு, தேடு = அவாவும். நல்லோர் சேர்க்கை = அடியார் கூட்டம். ஆம் = ஆகும் என்று, கூடி = பொருந்தி. அளாவுறு = அவருடன் கலக்கும்.

பொழிப்புரை :

மதயானையைப்போல் கண்டபடி ஓடித் தன்னிலையில் தாமும் மனத்தைத் தடுத்து மீட்டு அடியார்கள் நினைப்பது, வெற்றியின் குறியீடான வீரக்கழல்நிலைத்த உனது ஒப்பற்ற இருமலர்கள் ஒத்த திருவடிகளையும், அடியார்தேடும் ஞானமும், அடியார் கூட்டமுமேயாகும் என்று இருக்கும் அவரது மேன்மைபொருந்திய சிவயோகத்தில் அவருடன் பொருந்திக் கலக்கும் கோவே, குன்றக்குடியுறை தேவே; அத்தகு அன்பர் நிலையை எனக்கும் அருள்க.

விளக்கம் :

உரன் என்றும் தோட்டியான் ஓரைந்தும் காவாவழி மனம் மதயானைபோல் தறிகெட்டு ஓடித் தன்னிலையில் தாழ்வது ஆதலின் "ஓடு இழிசிந்தை" என்றார்.

கழல், வெற்றியின் குறியீடு. பெருமான் வெற்றியேயன்றிப் பிறிதறியாதவன் ஆதலின் அது "நிலைகழல்" எனப்பெற்றது.

பெருமான் திருவடிகளைக் குறிக்கும் "ஈடில் இணைமலர்த்தாள்கள்" என்பதை ஈடில்தாள்கள்; இணைதாள்கள், மலர்த்தாள்கள் என்று அடைகளைத் தனித்தனி கூட்டுக.

அவன் தன்னோில்லாத் தலைவனாதலின் அவை "ஈடில்தாள்கள்" என்றும், தொன்மைத் திருக்கோலமாகிய அம்மையப்பனாய் எழுந்தருளி அருள்கின்றவனாதலின் அவை "இணைதாள்கள்" என்றும், மலர்போல தன்னைப் பெற்றவர்க்குப் பெருமகிழ்ச்சியும் தண்மையும் பேரின்பமும் வழங்குவனவாதலின் அவை "மலர்த்தாள்கள்" என்றும் குறிக்கப்பெற்றன.

உலகில் நாம் தேடிப்பெறவேண்டுவதும், தன்னொப்பின்றித் தலை நிற்பதும் ஞானமே யாதலின் "தேடு ஒரு ஞானம்" எனப்பெற்றது. மேலும் ஞானமே வடிவான அவனை அடைதற்குரிய கருவி ஞானமே என்ற அப்பரடிகள் திருமுறை முன் கூறப்பெற்றது.

மகாசிவயோகு பற்றியும், அதன் நிறை பயன் பற்றியும் அப்பரடிகளின்

"உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருஎழுதி
உயிர்ஆ வணம்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி"

திருமுறை - 6. திருவாரூர்-1

இப்பகுதியில் "உயிராவணம் இருத்தல்", "உற்றுநோக்கல்" "உள்ளக்கிழியின் உருஎழுதுதல்" "உயிர் ஆவணம் செய்தல்" "உன் (பெருமான்) கைதருதல்", என்பன மகாசிவ யோகிற்குரிய படிமுறைகள் "உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தல்" என்பதே யோகநிலை. இதனை அடிகள், "மகாசிவயோகிற் கூடிஅளாவுதல்" என்கிறார்.

இலக்கணக்குறிப்பு :

மலர்த்தாள் - உவமைத்தொகை. ஓடுசிந்தை, இழி சிந்தை - வினைத்தொகைகள். சேர்க்கையுமே - ஏகாரம் தேற்றப்பொருளது.

9. சுக்கில ஆக்கையின் உள்ளே சூழும்ம லஇருள் உள்ளே
பக்குவம் இன்றிஎந் நாளும் பந்தப்பட் டே உள என்னைச்
சிக்கென வேவந்து பற்றித் திருந்திய உன்பதம் ஈதி
குக்குட கேதனக் கோவே குன்றக்குடியுறை தேவே.

கூட்டுமுறை :

குக்குட....தேவே; சுக்கில.... என்னை, வந்து சிக்கெனவேபற்றி... ஈதி என்று கூட்டுக.

குறிப்புரை :

குக்குடம் = சேவல். கேதனம் = கொடி. சுக்கிலம் = இந்திரியம் ஆக்கை = உடம்பு. மலம் = மும்மலம். பந்தப்பட்டே = கட்டுண்டே. சிக்கென = மிக உறுதியாக. திருந்திய = எந்நாளும் திருத்தமாகவே உள்ள. ஈதி = அருள்க.

பொழிப்புரை :

சேவற்கொடியுயர்த்த கோவே; குன்றக்குடியுறை தேவே; இந்திரியத்தால் ஆன இவ்வுடம்பின் உள்ளே அடைபட்டு, என்னைச் சூழ்ந்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மல இருளால், பக்குவப்படாமல் எந்நாளும் மலத்திற்கட்டுண்டு கிடக்கும் என்பால், நீயே வந்து என்னை மிகஉறுதியாகப் பற்றிக்கொண்டு, எந்நாளும் திருத்தமாகவே விளங்கும் உன் திருவடிகளை எனக்கு அருள்க.

விளக்கம் :

ஆக்கை = கட்டு. ஆக்கை என்பது இங்கு எழுவகைத் தாதுக்களால் ஆன உடம்பு குறித்தது. எழுவகைத் தாதுக்களாவன; இரதம் (உமிழ்நீர்) இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்பன.

உயிரிடத்ததான மும்மலமும் உயிரைச் சூழ்ந்து நின்று அறியாமை இருளில் அகப்படுத்துவதால் சூழும் மலஇருள் என்றார், மும்மலத்துள் ஆணவத்தின் இயல்பை

"ஒருபொருளும் காட்டாது இருள்; உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது"
- திருவருட்பயன்-3

இது = ஆணவம்.

(இருள், எந்த ஒரு பொருளையும் காட்டாதாயினும் தன் இருப்பையாவது காட்டும். ஆணவம் இவ்விரண்டையும் - தன்னையும் பொருள்களையும் காட்டாது)

"சிக்கெனவே வந்து பற்றுதல்" பெருமான் பொறுப்பு என்பதை, "தானே வந்து எம்மைத் தலையளித்துஆட்கொண்டு அருளும்" என்று மணிவாசகமும் கூறுதல் எண்ணத்தக்கது.

தானே வருதல் பெருமான் செயலாகக் கூறினும் "சிக்கெனப் பிடித்தல்" தன் செயலாக " சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே" என்பார் வாதவூரடிகள். பாம்பன் அடிகள், வருதலும் சிக்கெனவே பற்றுதலும் தன்செயலல்ல பெருமான் செயலே என்கின்றார்.

"ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் உயர்ந்தோன் இரப்புரை"

என்ற இலக்கண நெறி பற்றி, "ஈதி" என்றதனால் பெருமானின் தன்னேரில்லாத் தகுதியும், தன்தாழ்நிலையும் குறித்தார்.

ஆணவத்தின் குறியீடு சூரபதுமன். அவனைத் தடிந்து மயிலாகவும் சேவலாகவும் ஆட்கொண்ட பெருமை போல, தன்னையும் தடிந்து ஆட்கொள்ளவேண்டும் என்ற குறிப்புடையது. இங்குச் சேவல் குறித்தார், அடுத்த பாடலில் மயிலும் கூறுகிறார்.

இலக்கணக்குறிப்பு :

ஆக்கை - தொழிலாகுபெயர். மலஇருள் - உருவகம். பந்தப்பட்டே - தேற்றேகாரம். ஈதி - முன்னிலை ஒருமைவினைமுற்று. குக்குடகேதனம் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

10. நற்றமிழ் பாடுநக் கீரன் ஞான வெளிஅனு பூதி
சொற்றவன் ஏத்துஅரு ளோனே தோகை மயில்பரி யானே
இற்றை எனக்குஅருள் வோனே எங்கள் சிவபெரு மானே
குற்றமில் லாமறைக் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

எங்கள் ....தேவே; நற்றமிழ்.... எனக்கு அருளோனே; எனக்கும் அருள்க என்று வருவித்துக்கூட்டி முடிக்க.

குறிப்புரை :

நற்றமிழ் = திருமுருகாற்றுப்படை. ஞானவெளி = தடையேது மில்லாத ஞானமாகிய பெருவெளி. அனுபூதி = தான் கண்டறிந்ததும்; பிறர்க்கு எடுத்துச் சொல்ல இயலாததுமாகிய பெருநிலை - அனுபவநிலை. சொற்றவன் = சொன்ன அருணகிரிநாதர். தோகைமயில் = ஆண்மயில். பரி = குதிரை. இற்றை = இப்போதே. எங்கள் - முருகனடியார்களாகிய எங்கள்.

பொழிப்புரை :

முருகனடியார்களாகிய எங்கட்கு வாய்த்த சிவபெருமானே; குற்றமில்லா மறைகள் போற்றும் கோவே; குன்றக்குடியுறை தேவே; நற்றமிழாகிய திருமுருகாற்றுப்படை அருளிய நக்கீரரும், தடையேது மில்லாத ஞானப்பெருவெளி அனுபவத்தை உலகவர் உய்யச் சொல்லியுள்ள கந்தரனுபூதி அருளிய அருணகிரிநாதரும் போற்றுகின்ற அருள்வடிவானவனே. இப்பொழுதே எனக்கு அருள்புரிய உள்ளவனே. இப்பொழுதே எனக்கும் அருள்புரிந்தருள்க.

விளக்கம் :

சிவபெருமான் வேறு, அருள்தரு சண்முகநாதப் பெருமான் வேறல்லன். அவனே இவன், இவனே அவன் என்பதை

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதுஓர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"
- கந்தபுரா. திருவவதா..92

அருவமும் ... பிழம்பு = ... சோதி வடிவான பிரமம்.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால்"

- கந்தபுரா - திருவிளையா...19 : 1,2

என்பனவற்றால் குன்றக்குடியானை எங்கள் சிவபெருமான் என்றார்.

பாடிய நக்கீரரை மட்டுமன்றி, உடனிருந்துகேட்ட அனைவரையும் பூதத்தின் சிறையிலிருந்து விடுவித்தது திருமுருகாற்றுப் படையாதலின் அது "நற்றமிழ்" என்று சுட்டப்பெற்றது.

பெருமான் ஊர்தியாகிய மயிலைப் பரி என்று கூறும் வழக்கினை, "ஆடும்பரிவேல் அணிசேவல் என" - என்ற கந்தரனுபூதி, மற்றும் "மயிலேறு ராவுத்தனே" என்ற தொடர்களால் அறிக.

தன்னை வழிபடுகின்றவர் இடர்களைந்து பேரின்பக் கரை ஏற்றுகின்றவன் குன்றக்குடியான் என்பதால் "இற்றை எனக்கு அருளோனே" என்றார்.

என் நிலையுயர்த்தி என்னில் எழுந்தருள்க என்று வேண்டும் அடிகள், முன்னைய 9-ஆம் பாடலில் ஆட்கொண்டு உயர்த்திய சூரனாகிய "குக்குடகேதனமும்" இப்பாடலில் "மயிற்பரியும்" கூறினார்கள்.

இலக்கணக்குறிப்பு :

நற்றமிழ் - பண்புத்தொகைப்புறத்துப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பாடு நக்கீரன் - வினைத்தொகை. சொற்றவன் - எதுகை நோக்கிய செய்யுள் விகாரம். இது அருணகிரியாரைக் குறித்தலால் வினையாலணையும் பெயராய் நின்றது. ஏத்து அருளோனே - வினைத்தொகை. மயில்பரி - உருவகம். சிவபெருமான் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

திருச்சிற்றம்பலம்.